பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 05 வியாழக்கிழமை(18-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:113

# கருணாவின் பிரச்சினை தற்காலிகக் கோளாறே!

## புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் விளக்கம்

லண்டன்,மார்ச்18



**"கிழக்கில் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா ஏற்படுத்தியுள்ள பிரச்சினை ஒரு தற்காலிகக் கோளாறே. அது காலக்கிரமத்தில் தீர்க்கப்பட்டுவிடும். அந்தப் பிரச்சினையால் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கோ, தமிழ்த் தேசியப் போராட்டத்திற்கோ எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்பட்டுவிடாது" - இவ்வாறு அடித்துக் கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.**

விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், கருணாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து முதல் தடவையாக அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

லண்டனில் இருந்து வெளியாகும் 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு இது தொடர்பாக அவர் விரிவான பேட்டி ஒன்றை அளித்தார். தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் பிரதேசவாதங்களுக்கு அப்பாற்பட்டவர் என்று அந்தப் பேட்டியில் குறிப்பிட்ட பாலசிங்கம், மரபு ரீதியான தமிழ் சமூகத்தில் பல நூற்றாண்டுகளாக ஊறிப் போயிருந்த சாதி, சமய, வர்க்க, வகுப்பு வேறுபாடுகளைக் களைந்து, ஒன்றுபட்ட தேசிய விடுதலை இயக்கம் ஒன்றை உருவாக்கியமைக்காக மக்களால் பெரிதும் மதித்துப் போற்றப்படுபவர் பிரபாகரன் என்றும் விதந்துரைத்தார்.

அந்தப் பேட்டியின் முழுவிவரம் வருமாறு:-

*கேள்வி:* கருணா தரப்பினருக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்திற்கும் இடையிலான பிளவுபற்றி ஈழத்திலும் அதற்கு வெளியிலும் உள்ள தமிழ் மக்கள் ஆழ்ந்த கவலையும், துயரும் அடைந்துள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போதைய பிரச்சினை பற்றிய உங்கள் மதிப்பீடு யாது? தமிழ் மக்களின் போராட்டத்தைக் கருணாவின் கிளர்ச்சி மோசமாகப் பாதிக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? சமாதான முன்னெடுப்புக்களை இது எவ்வளவு தூரம் பாதிக்கும்?

*பதில்:* எமது விடுதலை இயக்கத்தின் பரிணாம வளர்ச்சிப் போக்கையும், வரலாற்றினையும் நன்கு புரிந்துகொண்டவன் என்ற வகையில், கருணாவின் விலகல் கொழும்பில் உள்ள ஊடகங்கள் கூறுவதுபோல் பெரிதாக எந்த அரசியல் - இராணுவ பிரச்சினைகளையும் புலிகளுக்குள் ஏற்படுத்தப் போவதில்லை என்று உறுதியாகச் சொல்வேன்.

குழப்பங்கள் மிகுந்த எமது சுதந்திரத்திற்கான விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுமாதிரியான நம்பிக்கைத் துரோகம், காட்டிக் கொடுப்புகள், விசுவாசமின்மை, குழிபறித்தல் போன்றவற்றை எமது அமைப்பு சந்தித்தே வந்திருக்கிறது.

இது மாதிரியான பிரச்சினைகள் எப்போதெல்லாம் எழுந்தனவோ அப்போதெல்லாம் எமது தலைமைத்துவம் அவற்றுக்கு முகம்கொடுத்து அவற்றை வெற்றிகரமாக முறியடித்து வந்துள்ளது. அதனால், கருணாவின் பிரிவு ஒரு புதிய விடயமே அல்ல.

உண்மையில் இது ஒரு சவால்தான். விரைவில் நாம் தீர்வு காண்போம் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

எமது தலைமைத்துவம் இது விடயத்தில் குழம்பவுமில்லை; பதற்றப்படவுமில்லை. பிரபாகரன் அமைதியான, ஆறுதலான, நிம்மதியான போக்கையே பேணுகின்றார். அவர் மோதல் போக்கில் இதனை அணுகுவதில்லை என்று தீர்மானித்துள்ளார். ஆயுத வன்முறை இல்லாமலும், இரத்தம் சிந்தாமலும் இந்த நிலைமையை வெற்றிகொள்வதற்கு எமக்கேயுரிய யுக்தி உண்டு. கருணாவின் கிளர்ச்சி ஒரு தற்காலிகமான கோளாறு. அது காலம் போகச் சரிவந்துவிடும்.

சமாதான முன்னெடுப்புக்களையோ, தமிழ்த் தேசியத்தின் போராட்டத்தையோ கருணாவின் பிரிவு மோசமாகப் பாதிக்குமென நான் நம்பவில்லை.

சமாதானத்திற்கும், பேச்சு மூல

(16ஆம் பக்கம் பார்க்க)

# யார் இந்தக் கருணா என்ற மனிதர்? கேட்கின்றார் அமெரிக்கத் தூதுவர்

## அவருடன் தங்களுக்கு எதுவித தொடர்பும் இல்லை என மறுப்பு

கொழும்பு, மார்ச்18

"யார் இந்தக் கருணா? இந்த மனிதரை நான் கண்டதுமில்லை; அவருடன் பேசியதுமில்லை. அவருக்கும் எங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை" என்று கூறினார் இலங்கையில் உள்ள அமெரிக்கத்தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரெட்.

நேற்று அவர் அமெரிக்க நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

இப்பொழுது விடுதலைப்புலிகள் இயக்கத் தலைமையுடன் கருணா முரண்பட்டுச் செயற்படுகிறார். கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து தனியாகப் பிரிக்கவும், கருணா தனியாக இயங்கவும் அமெரிக்கா பின்னணியில் இருந்து அவருக்கு உதவி வருகிறது என்று கூறப்படுகிறது. இது உண்மையா? - என்றே தூதுவரிடம் கேள்வி எழுப்பப் பட்டது.

"யார் இந்தக் கருணா? கருணா என்ற மனிதனை நாம் பார்த்ததும் இல்லை; அவருடன் பேசியதும் இல்லை. இப்படியான (அவருக்கு உதவும்) ஒரு முட்டாள் தனமான செயலில் அமெரிக்கா ஒரு போதும் ஈடுபடாது. முன்பின் தெரியாத ஒரு மனிதனின் பின்னணியில் அமெரிக்கா இருக்கின்றது எனக் கூறுவது பைத்தியக்காரத் தனமானதும், சிறு பிள்ளைத்தனமானதும் ஆகும். இப்படிக் கூறப்படுவதை நான் முற்றாக நிராகரிக்கின்றேன்." என்று பதில் அளித்தார் தூதுவர்.

செய்தியாளர்கள் சந்திப்பின்போது தூதுவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நீதியானதும், சுதந்திரமானதுமான ஒரு தேர்தல் நடைபெறவேண்டும் என்பதில் அமெரிக்கா பெரிதும் அக்கறை கொண்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே தேர்தல் கண்காணிப்பு செயற்பாடுகளுக்காக ஆறு லட்சம் அமெரிக்க டொலர்

(02ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரத்தின் போது

# ஈ.பி.டி.பியினர் - மாணவர்கள் கந்தர்மடத்தில் முறுகல் நிலை

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. கட்சியினருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையே முறுகல் நிலைமை உருவாகி வருகிறது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முற்பகல் கந்தர்மடம் பகுதியில் இதுபோன்ற சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

கந்தர்மடம் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரது இல்லத்துக்கு முன்பாக கடும் இராணுவம் மற்றும் பொலீஸ் பாதுகாப்புடன் வாகனங்களில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி. ஆதரவாளர்களும், பல்கலைக்கழக மாணவர் குழுவினரும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தின் போது ஈ.பி.டி.பியினருக்குப் பாதுகாப்பு வழங்கிய படையினரும், பொலீஸாரும் மாணவன் ஒருவரைத் தாக்குவதற்கு முயன்றனர் என்றும் -

இதனைக் கேள்வியுற்று அப்பகுதியில் திரண்ட மாணவர்கள் மீது ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் தனது வாகனத்தைச் செலுத்த முற்பட்டார் எனவும் -

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று மாலை விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்

(02ஆம் பக்கம் பார்க்க)

## சம்மாந்துறையில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் படுகொலை!

மட்டக்களப்பு,மார்ச்18

சம்மாந்துறையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காலிதீன்சலாம் (வயது - 45) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரசார அலுவலகத்தில் பணியாற்றும் இவர், நேற்றுமுன்தினம் மாலை 3 மணிக்குப் பின்பு காணாமற் போனதாகவும் -

அதன்பின்னர் நேற்றுக்காலை 7

(02ஆம் பக்கம் பார்க்க)

# தளபதிகள், பொறுப்பாளர்கள் விரைவில் கிழக்கே செல்வர்

## தமிழ்ச்செல்வன் தகவல்

கிளிநொச்சி,மார்ச்18

தமிழீழத் தேசியத் தலைவரால் நியமிக்கப்பட்ட சிறப்புத் தளபதி மற்றும் பொறுப்பாளர்கள், போராளிகள் விரைவில் மட்டக்களப்புக்குச் சென்று தமது நிர்வாகப் பொறுப்புக்களைக் கையேற்றுச் செயற்படுவார்கள்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று அரச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டை, தமிழர்களுடைய எதிர்காலத்தை சிந்தித்து விசுவாசிக்கின்ற அனைத்து மக்களுக்கும் கருணா என்கின்ற தனி மனிதன் ஒருதுரோகச் செயலைச் செய்துள்ளதால் நாம் அதனை மிகவிரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நிலைமைகளைச் சீர்செய்வோம்.

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மக்கள் கருணாவின் மோசடிகள், குற்றச் செயல்கள் சம்பந்தமாக மிகத் தெளிவாகப்புரிந்து கொண்டுள்ளார்கள். மட்டக்களப்பில் சமாதானச் சூழலைச் சீருலைக்காது அதனை முன்னெடுத்துச் செல்லவேண்டியதேவை விடுதலைப் புலிகளுக்கு உள்ளது. அத்தோடு, அங்குள்ள ஆயிரக்கணக்கான

(02ஆம் பக்கம் பார்க்க)

## 'வடக்கின் பெரும்போர்' இன்று காலை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்18

வடக்கின் மாபெரும் போர் (Battle of the North) என்று வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகளிடையேயான கிரிக்கெட் ஆட்டம் இன்று மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இரு கல்லூரிகளுக்கும் இடையில் 1904ஆம் ஆண்டு இந்தப் போர் ஆரம்பமானது. போட்டி ஆரம்பமாகி 100வருடங்கள் பூர்த்தியாகுவதனை முன்னிட்டு இதுவரையும் இருநாள்கள் நடைபெற்றுவந்த ஆட்டம் மூன்று நாள்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் இன்று காலை 9.30மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டம் இப்போட்டித் தொடரின் 98 ஆவது ஆட்டமாகும்.

வடக்கின் மாபெரும் போர்த் தொடரில் சென். ஜோன்ஸ்கல்லூரி 32 ஆட்

(02ஆம் பக்கம் பார்க்க)

# டாக்டர்கள் வேலை நிறுத்தத்தால் மருத்துவ சேவை பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்18

சம்பள முரண்பாடு பிரச்சினை காரணமாக மருத்துவர் சங்கம் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தால் மருத்துவ சேவைகள் ஸ்தம்பித்திருக்கின்றன.

ஏழாவது நாளாக நேற்றும் டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

யாழ் ஆஸ்பத்திரியிலும் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இதனால் வைத்திய சேவைகள் நாளுக்கு நாள் பெரும் பாதிப்படைந்து நோயாளர்கள் உயிராபத்தைச் சந்திக்கும் நிலைமை ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

தென்னிலங்கையைச் சேர்ந்த சில ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களை அனுமதிப்பதும் நிறுத்தப்பட்டிருக்கிறது. (ஐ-15)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தேர்தல் நெருங்குவதோடு வேலை நிறுத்தங்கள் அதிகரிப்பு

கொழும்பு,மார்ச்18

பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண் டிருக்கும் வேளையில் அரச வைத்திய சாலை டாக்டர்கள், ஆயுர்வேத வைத் தியசாலை வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள், பல்கலைக்கழக ஊழியர் கள் என பல்வேறு தரப்பினரும் வேலை நிறுத்தத்தில் நேற்று ஈடுபட்டனர்.

மின்சார சபை ஊழியர் சங்கம் இன்று அடையாள வேலை நிறுத்த மொன்றில் ஈடுபடப்போவதாக அறிவித் துள்ளது.

இதேவேளை, காபந்து அரசு சம் பள முரண்பாடுகளுக்குத் தீர்வொன்றைக் காணமுடியாது என காணி அமைச் சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். அத்துடன், தேர்தல் நெருங்கும் வேளை யில் அரசியல் லாபங்கருதி இவ்வேலை நிறுத்தங்களை ஜே.வி.பி. தூண்டி விட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சுமத் துகின்றார்.

களுபோவில, ராகம, குருநாகலை ஆகிய போதனா வைத்தியசாலைக ளில் நோயாளிகள் சேர்க்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர்களது சம்பள முரண்பாடு தீர்க்கப்பட்டுள்ள போதும் அதற்கான சுற்றறிக்கைகள் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை. அதனாலேயே ஊழியர்களின் போராட் டம் என பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (எ-க)

# அபிவிருத்தி லொத்தரில் யாழ். வாசிக்கு ரூ.10 லட்சம்!

யாழ்ப்பாணம்,மார்ச்18

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை யின் 'ஜயோத' அதிர்ஷ்டச் சீட்டி ழுப்பில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த ஒருவருக்கு அதிர்ஷ்டத் தொகையாக 10 லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் 'ஜயோத' சீட்டிழுப்பு நேற்றுமுன் தினம் கொழும்பில் அதிர்ஷ்டம் பார்க் கப்பட்டது. இதில் வெற்றி இலக்க மாக 523328 என்ற இலக்கம் தெரிவு செய்யப்பட்டது. இந்த இலக்கத்துக் குரிய சீட்டு அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ். மாவட்ட முகவருடா கவே விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த வெற்றி இலக்கத்தை உடைய அதிர்ஷ்டச் சீட்டினை வைத்திருப் பவர் இல.55, முனீஸ்வரன் வீதி, யாழ்ப் பாணம் என்ற முகவரியில் அல்லது இல.33 சென். மைக்கல் வீதி, கொழும்பு என்னும் முகவரியில் தொடர்புகொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் ஒரு தடவை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவ ருக்கு 10 லட்சம் ரூபா பரிசுத் தொகை கிடைத்தது எனவும்- எனினும் இது வரை அந்த வெற்றி இலக்கத்தையு டைய சீட்டை வைத்திருப்பவர் அத னைப் பெற்றுக்கொள்ளவில்லை என வும் அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ். மாவட்ட முகவர் சோ. மகேந்திர லிங்கம் தெரிவித்தார். (ஐ-8)

## கல்குடாவில் திடீர் ஹர்த்தால்: ஹிஸ்புல்லாவின் வரவை எதிர்த்து

ஏறாவூர்,மார்ச்18

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல் குடா தேர்தல் தொகுதியில் நேற்று நண்பகலுக்குப் பின்னர் திடீர் ஹர்த் தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் ஓட்டமாவடி, வாழைச் சேனை, மீராவோடை ஆகிய பகுதி களில் இயல்புநிலை பாதிக்கப்பட்டது.

அங்கு பதற்றத்தைத் தணிப்பதற் காகப் பொலீஸாரும், இராணுவத்தின ரும் கூட்டாக இணைந்து தீவிர பாது காப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு முதன்மை வேட்பாளர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா (முன்னாள் எம்.பி.) நேற்று மாலை ஓட்டமாவடிப் பகுதிக்கு தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக விஜ யம் செய்யவிருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே திடீர் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டதாகக் கூறப்பட்டது. (எ-க)

### மட்டுவிலில் நாய்களுக்குத் தடுப்பூசி

தென்மராட்சி,மார்ச்18

மட்டுவில் பகுதியில் வளர்ப்பு நாய் களுக்கான விசர் நோய்க்கெதிரான தடுப்பு மருந்து இன்று பின்வரும் இடங் களில் ஏற்றப்படவுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்கு அருகில் உள்ள நிலையங்களில் தடுப்பு மருந்து ஏற்றிக்கொள்ளுமாறு பொதுச் சுகா தாரப் பரிசோதகர் இ.சிரேஷ்டகுமார் அறிவித்துள்ளார்.

★ மட்டுவில்வளர்மதி சனசமூக நிலை யத்தில் காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை.

★ கைதடி நுணாவில் குமரகுருபரன் சனசமூக நிலையத்தில் காலை 10.45 மணி தொடக்கம் 11.45 வரை.

★ மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் பகல் 12.00 தொடக் கம் 1.00 மணி வரை.

★ மட்டுவில் அம்பாள் சனசமூக நிலையத்தில் பிப.1.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை.

★ மட்டுவில் வேற்பிள்ளை சனசமூக நிலையத்தல் பி.ப. 2.00 மணி தொடக் கம் 3.00 மணிவரை.

வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கப்படும். (ஐ-117)

### யாழ். ஆஸ்பத்திரிக்கு வைத்திய நிபுணர் நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ் போதனா வைத்தியசாலைக்கு மேலும் ஒரு வைத்திய நிபுணர் நியமிக் கப்பட்டுள்ளார்.

டாக்டர் சிவன் சுதன் என்பவரே புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் வைத திய நிபுணராவார்.

யாழ். போதனாவைத்தியசாலை யில் இயங்கும் எட்டு வைத்திய நோயா ளர் விடுதிகளுக்கும் பொதுவாக 5 வைத்திய நிபுணர்களே கடமையாற்றி வந்தனர். தற்போது இவருடன் 6 வைத் திய நிபுணர்கள் பணியாற்றத் தொடங் கியுள்ளனர்.

இதேவேளை -

வைத்தியசாலைக்கு 11 உள்ளக பயிற்சி வைத்தியர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர். உள்ளகபயிற்சிக்காகத தெரிவுசெய்யப்பட்ட இவர்கள் அடுத்த வாரம் முதல் தமது பயிற்சியினை ஆரம்பிக்கவுள்ளனர். (ஐ-15)

## அமைதி திரும்பும் வரை கிழக்குப் பல்கலையில் வகுப்புக்களும், பரீட்சைகளும் வேண்டாம்

### திருமலை மாணவர்களும் விண்ணப்பம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மீண்டும் வகுப்புக்களை ஆரம்பிக்கப் போவதாக பல்கலைக்கழக பதிவா ளர் அறிவித்துள்ள போதும் தற் போதைய சிக்கலான சூழ்நிலையில் தாங்கள் வகுப்புக்களுக்குத் திரும் பப் போவதில்லை என கிழக்குப் பல் கலைக்கழகத்தில் பயிலும் திருகோண மலை மாவட்ட பட்டதாரிகள் சங்கத் தினர் பல்கலைக்கழக பதிவாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதி யில் நிலை கொண்டுள்ள விடுதலைப் புலிகளுக்கும் வன்னித் தலைமைக் கும் இடையே சிக்கலான சூழ்நிலை நிலவுவதனால் எமது பெற்றோரும் உற வினர்களும் எம்மை அங்கு அனுப்பு வதில் அச்சம் கொண்டுள்ளனர்.

எனவே, இதற்கான உகந்த சூழ் நிலையும், வழமை நிலையும் உருவா கும்வரை வகுப்புக்களையும், பரீட் சைகளையும் பின்போடுங்கள் விடு முறையை நீடியுங்கள் என்று இந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

அனைத்துப் பல்கலைக் கழகங் களின் மாணவர் ஒன்றியத்தின் வவு னியா மாவட்டப் பிரிவு ஏற்கனவே இந்த வேண்டுகோளை விடுத்திருப் பது தெரிந்ததே. (எ-க)

## புலிகள் பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பது குறித்து இன்று முடிவு

### வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி யில் உள்ள வாக்காளர்கள் வாக்க ளிப்பது தொடர்பான இறுதி முடிவு இன்று வெளியிடப்படும் என்று வவு னியா அரச அதிபர் கே.கணேஷ் தெரி வித்தார்.

வன்னித் தேர்தல்தொகுதியில்உள்ள மக்கள் வாக்களிப்பது தொடர்பாக ஆராயும் பொருட்டு வன்னி இராணு வத் தளபதிக்கும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிக்கும் வவுனியா, முல்லைத் தீவு மற்றும் மன்னார் அரச அதிபர் களுக்கும் இடையில் இடம்பெற்ற சந் திப்பின்போது இது தொடர்பாக ஆரா யப்பட்டுள்ளது. வன்னி தேர்தல் தொகு தியில் 2 லட்சத்து 26 ஆயிரத்து 604 பேர் பதியப்பட்ட வாக்காளர்கள். இவர் களில் 91ஆயிரத்து 894 பேர் இராணு வக் கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் ஆவர். முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர்களும் வவு னியா வடக்கை சேர்ந்த வாக்கா ளர்களும் பெரும்பாலும் ஓமந்தை மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படும் வாக்குச் சாவடியிலேயே வாக்களிக்க ஏற்பாடும் செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை - வாக்களிக்க வருப வர்களுக்கான போக்குவரத்துக்கான ஏற்பாடுகளை வவுனியா அரச செய லகம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. வாக்களிக்க வருபவர்கள், வாக் காளர் அட்டையுடன் தேசிய அடை யாள அட்டையும் கொண்டு வந்தால் போதுமானது என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

ஆயினும், வாக்காளர்கள் பொருள் கள் கொண்டு வருவதற்கு அனுமதிக் கப்படமாட்டார்கள் என்று கூறப்பட் டது. எத்தனை வாக்காளர்கள் வந்தா லும் அவர்கள் உடனடியாக சோதனை செய்யப்பட்டு வாக்களிக்க அனுமதிக் கப்படுவர் என்றும் தெரியவருகிறது. (எ-9-164)

---

### தளபதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாவிப் போராளிகளின் உயிர்க ளுக்கு இழப்பு ஏற்படாதவாறு நிலை மையைச் சுமுகமாக ஒழுங்குபடுத் திக் கொள்ளவேண்டுமென்பதே எமது தேசியத் தலைவரின் விருப்பமாகும். அதற்குச் சகல தந்திரோபாயங்களை யும் தீட்டி நகர்வுகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. மிக விரைவில் இதற் கான தீர்வு எட்டப்பட்டுவிடும் - என்றார் தமிழ்ச்செல்வன். (ஐ-8)

---

### யார் இந்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை இந்த அமெரிக்கா வழங்குகிறது.

கடந்த பத்து வருடங்களாக அமெ ரிக்க அரசு இலங்கையில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான உதவிகளை வழங்கி வருகின்றது.

இக்கட்டான ஒரு நிலைமையில் நடைபெறும் இத்தேர்தல் நூற்றுக்கு நூறு வீதம் ஜனநாயக அடிப்படை யில் நடக்கவேண்டும். நீதியானதும், சுதந்திரமானதுமாக அமைய வேண்டும் அதற்காக அமெரிக்கா சகல உதவி களையும் வழங்கும். இப்படி அமெரிக் கத் தூதுவர் குறிப்பிட்டார்.

ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண் டும் என்று கூறுகின்றீர்கள்? ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புலி களின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதே சங்களில் வாழும் பல லட்சம்பேர் வாக் களிக்க முடியாமல் இருக்கின்றனர். இதற்கு என்ன சொல்கின்றீர்கள்? என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"வாக்களிப்பது ஒவ்வொருவரின தும் அடிப்படை மனித உரிமை. இதனை எவரும் மறுக்க முடியாது. இப்பிர தேச மக்களும் வாக்களிக்க தேர்தல் ஆணையாளர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்" என்று தூது வர் பதில் அளித்தார். (எ-க)

---

### சம்மாந்துறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் பலத்த அடிகாயங்களு டன் வீரமுனைக் கிராமத்துக்கு அண் மையில், சனநடமாட்டம் அற்ற இடத் தில் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் -

நேற்று மாலை, மட்டக்களப்பு காவத்த முனைப்பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் எனக் கரு தப்படும் 9பேர் காயமடைந்து வாழைச் சேனை மற்றும் மாஞ்சோலை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-8)

---

### வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டங்களிலும் யாழ். மத்திய கல்லூரி 22 ஆட்டங்களிலும் இதுவரை வெற்றி பெற்றுள்ளன. 35ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. எட்டு ஆட்டங்களில் பதிவுகள் இல்லாத காரணத்தால் அந்த முடிவுகள் தெரிய வில்லை.

நாளைமறுதினம் முடிவடையும் வடக்கின் மாபெரும் மோதலின் இறுதி யில் ஒவ்வொரு துறைகளிலும் சிறந்து விளங்கிய வீரர்களும், ஆட்ட நாயக னும் தெரிவுசெய்யப்பட்டு பரிசு கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ள னர். யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலை களிலே திறமையை வெளிக்காட்டிய வீரர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மூன்று நாள்களும் தினமும் காலை 9.30மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். ஒருதினத்தின் ஆட்டநேரத்தில் மொத் தம் 105ஓவர்கள் பந்துவீசப்பட வேண் டும் என்பது கட்டாயப்படுத் தப்பட்டுள் ளது. (ம-5)

---

### ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

நேற்றைய சம்பவத்தின்போது கொதிப்படைந்த மாணவர்கள், ஈ.பி. டி.பியினரை அவர்களது தலைமையக மான ஸ்ரீதர் தியேட்டர் வரை விரட் டிச் சென்றனர் என்றும் அந்த அறிக்கை யில் மாணவர் ஒன்றியம் தெரிவித் திருக்கிறது.

ஈ.பி.டி.பி. கட்சியினரோ, அல்லது அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் படையினரோ, பொலீஸாரோ மாணவர் களைச் சீண்டிப் பார்க்க முற்பட்டால் விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரி டும் என்றும் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் அதன் அறிக்கையில் எச்சரித்திருக்கிறது.

இதேவேளையில் -

நேற்றைய சம்பவம் தொடர்பாக ஈபிடிபி அமைப்பும் பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது. கந்தர் மடம் பழம்வீதிப் பகுதியில் தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்த தமது கட்சியினரை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் இரண்டு வேட்பாளர்களின் ஆதரவாளர்களும் புலிகள் இயக்க உறுப்பினர்களுமான சிலர் அச் சுறுத்தி வாகனங்களைத் தடுத்தும் பிரசுரங்களைப் பறித்துத் தீ வைத்தும் அட்டகாசம் புரிந்தனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கண் காணிப்புக் குழுவிடமும், பொலீஸாரி டமும் முறையிடப்பட்டிருப்பதாகவும் ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது. இதற் கிடையில், நேற்று நெடுந்தீவு மத்தி, கிழக்குப்பகுதிகளில் பொலீஸாரின் உதவியுடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடு பட்ட ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் மதனராஜா தலை மையிலான குழுவுக்கும் பொது மக் களுக்குமிடையில் கடும் வாக்கு வாதம் இடம்பெற்றது என்றும் -

இதனை அடுத்து ஈ.பி.டி.பி அமைப் பின் பிரசாரப் பணிகளைக் கைவிட்டு தமது அலுவலகத்திற்குத் திரும்பி விட்டனர் என்றும் - நெடுந்தீவில் இருந்து நேற்றிரவு கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது. (ஐஎ-7)

## செஞ்சிலுவைக் குழுவுடன் தொடர்பு கொள்ளக்கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

செல்லத்துரை மணிவண்ணன் (கண்ணன் - டச்சுவீதி, சாவகச் சேரி), கஸ்பார் மேரி ஜரிஸ் (ஈச்ச மோட்டை வீதி, சுண்டுக்குளி), மாரி முத்து கதிரவேலு (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), சொலமன் ஜெயம்மா (மாவடிப்பிள்ளையார் கோயிலடி, மீசாலை)

கதிர்காமு சின்னத்துரை (சர சாலை வடக்கு, சாவகச்சேரி), அப்புத் துரை சரவணமுத்து (தனங்களப்பு, சாவகச்சேரி), வரதராசா பரிமளா தேவி (மட்டுவில் தெற்கு, சாவகச் சேரி), ரத்தினம் அன்னபூரணம் (ஞான வைரவர் கோவிலடி, நுணாவில்)

ஐயம்பிள்ளை சிவராசா (குடி யேற்றத்திட்டம், மறவன்புலோ), வல் லிபுரம் தங்கமலர் (பள்ளிவாசல் அரு கில் சாவகச்சேரி), சண்முகம் நித் தியானந்தம் (மறவன்புலோ), மகேந்திரராசா மேரி எலிசபேத் (10 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு), சுப்பிரமணியம் தேவி (தாளையடி), சபாரத்தினம் சாந்தி (குமிழமுனை, முள்ளியவளை), அம்பலம் ஆனந்த ராசா (பொன்னையா வீதி, ஆனைக் கோட்டை), சற்குணநாதன் இளைய தம்பி (வரணி, இயற்றாலை).(ஐ-10)

### கூட்டங்கள்

அச்சுவேலி,மார்ச்18

தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 7 மணிமுதல் ஆவரங்கால் சிவன்கோ வில் வீதியில் நடைபெறவுள்ளது. (எ-11)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்18

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிற்கான கடற்றொழிலா ளர் கூட்டுறவுச் சங்க சமாசம் நிறு வுவது தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ் செல்வ நாயகம் தலைமையில் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்

## சாயி சிந்தனை


### உங்களை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்



யாரையாவது கேட்டுப்பாருங்கள். ராமையா என்றால் 'நான்' என்று பதில் வருகிறது! அந் தோனி என்றால் 'நான்' என்று பதில் வருகிறது! பரமேஸ்வரன் என்றால் 'நான்' என்று பதில் வருகிறது! அதைப்போலவே என்னென்ன பெய ரில் எல்லாம் அழைக்கும் பொழுதும் நான், நான் என்ற பதில் கிடைக்கிறது. இங்கு பெயர்களும் வடிவங்களும் வெவ்வேறானவையாக இருந்தாலும் 'நான், நான்' என்பது மட்டும் ஒரே சீராக எல்லோரிடமும் ஒன்றுதான். ஆகவே, முதலில் உங்களை நீங்கள் புரிந்து கொண்டால், உலகத்தையே புரிந்துகொள்ளமுடியும். உண்மையில் சொல்லப்போனால் இந்த உலகம் முழுவதுமே 'நான்' என்ற தத்துவத்தில் அடங்கியுள்ளது. இதைத்தான் வேதாந்தம் தெளிவாக விளக்கிறது. இந்த வேதாந்தமே அத்வைதம். வேதம் என்பது த்வைதம். வேதாந்தமே அத்வைதம். ஒரே சத்தியம் (கடவுள்). பலரால் பலவாறாக வர்ணிக்கப் படுகிறது. எவராவது துன்பப்படுவதை காணும்போது மனம் இளகினால் எவருடைய கஷ்டத்தையாவது நீக்க - உதவிசெய்ய நீ முன்வருவாயா னால் - எவருடைய துக்கத்தையாவது நீக்க நிவாரணம் செய்ய முயற்சி எடுப்பாயானால், அத்தகைய இருதயம் இருக்கும்போதுதான் நீ மனிதன். மனிதன் என்றால் என்ன? மனம் உடையவனே மனிதன். மனம் இல் லாதவனுக்குத் தயை, கருணை ஏற்படாது. ஆகையால் நீ அனைவரையும் பார்த்து அவர்களது துயரத்தை நீக்க வழிவகை செய்யவேண்டும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

# புஷ்ஷின் பொருளாதாரக் கொள்கை: அமெரிக்கர்கள் கடும் அதிருப்தி



நியூயோர்க்,மார்ச்18

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து பெரும்பாலான அமெரிக்கர்கள் அதிருப்தியாக உள்ளனர் என்பது டைம்ஸ் பத்திரிகையும் சி.பி.எஸ். செய்தி நிறுவனமும் சேர்ந்து சமீபத்தில் நடத்திய கருத்துக் கணிப்பு மூலம் தெரியவந்திருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரம் திசை மாறிச்செல்கிறது. வேலைவாய்ப்பு அதிகரிப்பதற்குப் பதிலாகக் குறைந்து வருகிறது என்று 54 வீதம் பேர் கருத்தும் கவலையும் தெரிவித்திருக்கிறார்கள்.

அதேசமயம், ஜோர்ஜ் புஷ்ஷின் வெளியுறவுக் கொள்கையை அந்த மக்கள் பாராட்டுகின்றனர். பயங்கரவாதத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை அவர் எடுத்துள்ளார் என அவர்கள் கருதுகின்றனர்.

மேலும் ஜனநாயகக் கட்சி சார்பில் அதிபர் தேர்தலில் நிச்சயமாகப் போட்டியிடுவார் என்று கூறப்படும் ஜோன் ஹெரி குறித்து வாக்காளர்களுக்கு அதிகம் தெரிந்திருக்கவில்லை.

மக்கள் எதை விரும்புவார்களோ அதைத்தான் ஜோன் ஹெரி பேசுகிறாரே தவிர, உண்மையில் தனக்குள்ள கொள்கைகள் என்னவென்பதை அவர் வெளிப்படுத்தவே இல்லை என்றே பலர் கருதுகின்றனர். வாக்கு வாங்க வேண்டும் என்பதற்காக வேலைவாய்ப்புக் குறைவு குறித்தும் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்தும் சாடிவரும் ஹெரி, இவற்றுக்கு மாற்றாகத் தன்னிடம் உள்ள சிறந்த கொள்கைகள் என்னவென்பதை இதுவரை தெளிவாக அறிவிக்கவில்லை என்றே பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

இவ்விரண்டு அம்சங்கள் நீங்கலாக பிறவிடயங்களில் இருவருக்கும வாக்காளர்களிடையே சம ஆதரவே காணப்படுகிறது.

ஜனநாயகக் கட்சியில் பில் கிளின்டனுக்குப் பிறகு பதவிக்கு வந்தே ஜோர்ஜ் புஷ் நேர்மையானவர், நல்ல நடத்தை உள்ளவர் என்ற எண்ணம் எல்லா அமெரிக்கர்களிடமும் இருக்கிறது.

ஈராக் மீது படையெடுத்ததை உலக அரங்கில் பல நாடுகள் விமர்சித்தாலும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளால் நிலைகுலைந்துவிடாமல் - அவர்களிடம் பேரம் பேசாமல் - அவர்களை ஒடுக்குகிறார் ஜோர்ஜ் புஷ் என்றே அமெரிக்கர்கள் பாராட்டுகின்றனர்.

அங்கு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் இன்னும் முழு அளவில் சூடுபிடிக்கவில்லை. அப்படி சூடுபிடிக்கும் போது ஜோர்ஜ் புஷ்ஷுக்குத் தரப்படும் ஆதரவின் அளவு குறையலாம். ஆனால், ஹெரியின் கொள்கைகள் குறித்து முழு விவரங்கள் வெளிவந்தால்தான் மக்கள் யார் பக்கம் என்பது தெளிவாகும். (ஐ-க)

# அணு ஆயுத பரிசோதனைகளை அனுமதிக்க ஈரான் இணக்கம்

வாஷிங்ரன்,மார்ச்18

ஐ.நா. அணுவாயுத சோதனையாளர்கள் தங்கள் நாட்டில் சோதனை நடத்த ஈரான் அரசு ஒப்புக்கொணடுள்ளது.

அவர்களை எப்போது நாட்டிற்குள் அனுமதிப்பது என்பது குறித்து எதிர்வரும் 27இல் நடைபெறவுள்ள கூட்டத்தில் ஈரான் முடிவு செய்யும்.

இத்தகவலை ஐ.நா.அணு ஆயுதக் கண்காணிப்புக்குழுத் தலைவர் முஹமது எல்பாராடி செவ்வாய்க் கிழமை தெரிவித்தார்.

கடந்த வாரம் அணுவாயுத சோதனையாளர்கள் குழு ஈரான் செல்வதாக இருந்தது. ஆனால், அவர்களை உள்ளே அனுமதிக்கமாட்டோம் என்று ஈரான் கூறியிருந்தது. இப்போது ஈரான் தனது முடிவை மாற்றிக்கொண்டுள்ளது. (ஐ-3)

# பிரிட்டிஷ் அமைச்சரின் மகள் பரசூட் விபத்தில் மரணம்!

## சாகஸம் நிகழ்த்தியபோது சம்பவம்

வானத்திலிருந்து கீழே குதித்து சாகஸம் செய்யமுயன்ற பிரிட்டன் அமைச்சர் டெனிஸ் மெஷேனின் மகள் கிலாரா பார்னெஸ் (வயது 24) பரசூட் கோளாறு காரணமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் ஆஸ்திரேலிய நாட்டிலுள்ள மெல்போர்ன் நகரில் கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்தது.

வானத்திலிருந்து பரசூட் மூலம் கீழே குதிக்கும் சாகச சங்கத்தில் கிலாரா பார்னெஸ் உறுப்பினராக இருந்துவந்தார். கடந்த திங்கட் கிழமை 200ஆவது முறையாக சாகஸ நிகழ்ச்சியை நிறைவேற்ற அவர் முற்பட்டார். தன்னைப்போலவே சாகஸம் நிகழ்த்தும் ஆஸ்திரேலியக் காதலனுக்கு முத்தமிட்டுவிட்டு பார்னெஸ் சாகஸம் செய்ய முயன்றார்.

அப்போது பரசூட்டில் கோளாறு ஏற்பட்டதால் பரிதாபமாக அவர் உயிரிழந்தார். தகவல் அறிந்ததும் அவரது குடும்பத்தினர் ஆழ்ந்த கவலை அடைந்தனர்.

பார்னெஸின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக மெல்போர்ன் நகருக்கு பயணமாயினர். (ஐ-க)



ஈராக்கில் அல்கெய்டா மற்றும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்களைச் சேர்ந்த தீவிரவாதிகளைக் கண்டுபிடிப்பதற்கான மிகப்பெரும் தேடுதல் நடவடிக்கைகளை அமெரிக்கப்படையினர் ஆரம்பித்துள்ளனர். முன்னாள் அதிபர் சதாமுக்கு ஆதரவு அதிகம் இருக்கும் பகுதிகளில் இந்தத் தேடுதல் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையில், நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதல்களில் பக்தாத்துக்கு வடக்கே உள்ள பகுதிகளில் ஆறு ஈராக்கியர்களும் வெளிநாட்டவர்கள் சிலரும் உயிரிழந்தனர். ரொக்கெட் தாக்குதலில் சிதைந்த வீடு ஒன்றை அடையாளம் காட்டும் ஈராக்கியப் பெண்மணி.

# அல்கெய்டாவினரைத் தேடி பாக். இராணுவ நடவடிக்கை

## 8 சிப்பாய்கள் பலி; 24 சந்தேகநபர்களும் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத்,மார்ச்18

பாகிஸ்தான் படைகள் ஆப்கானிஸ்தானுடனான எல்லைப் பிரதேசத்தில் அல்கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகளைத் தேடி பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த நடவடிக்கையின்போது இடம்பெற்ற கடும்சமரில் குறைந்தது எட்டு பாகிஸ்தான் இராணுவத்தினர் உயிரிழந்தனர்; சந்தேகநபர்கள் 24 பேரும் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டது.

அல்கெய்டா தீவிரவாதிகளுக்குப் புகலிடம் கொடுத்தார்கள் எனக் கருதப்படும் உள்ளூர் பழங்குடித் தலைவர்கள் சிலரைக் கைதுசெய்வதற்காக ஆப்கான் எல்லையில் உள்ள வஸிரிஸ்தானின் தென்பகுதியில், வனா நகருக்கு அருகில் இருக்கும் கிராமம் ஒன்றை பாகிஸ்தான் துருப்புக்கள் முற்றுகையிட முயன்ற சமயமே பெரும் சண்டை வெடித்தது.

நேற்றுமுன்தினம் முழுநாளும் கடும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்ததாக உள்ளூர் வாசிகள் தெரிவித்தனர்.

"இந்த இராணுவ நடவடிக்கையின்போது பயங்கரவாதச் சந்தேகநபர்கள் எனக் கருதப்படும் 24 பேர் உயிரிழந்திருக்கின்றார்கள் என நாம் நம்புகிறோம்" - என்று பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சாகுகட் சுல்தான் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் அநேகமானோர் தீவிரவாதிகளுக்கு உதவும் பழங்குடியினர் என்றும் அல்கெய்டா இயக்கத்தவர் என்று கருதும் சிலரும் உயிரிழந்தவர்களில் அடங்குவர் என்றும் அவர் கூறினர்.

சம்பந்தப்பட்ட கிராமத்தை பாகிஸ்தான் இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்ட சமயம் இரண்டு முனைகளிலிருந்து அவர்கள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டதாகவும் - அதையடுத்து துப்பாக்கிகள், மோட்டார்கள் கொண்டு இருபகுதியினரும் சரமாரியாக பரஸ்பரம் மோதிக்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஓரளவு சுயாட்சி முறையுள்ள வஸிரிஸ்தான் பகுதியில் ஒருதலைப் பட்சமாக பாகிஸ்தான், இராணுவ நடவடிக்கை எடுத்திருப்பதை ஓர் ஆக்கிரமிப்புச் செயற்பாடு என அப்பகுதிப் பழங்குடித் தலைவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும், வெளிநாட்டு தீவிரவாதிகள் இப்பிரதேசத்துக்குள் புகுந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் இத்தகைய இராணுவ நடவடிக்கை தவிர்க்கமுடியாதது என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப் தெரிவித்தார்.

இதேவேளை -

இப்பகுதியை அண்டிய பாகிஸ்தான் பிரதேசத்திலும் இதேபோன்ற படை நடவடிக்கை ஒன்றை ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கப்படைகள் ஆரம்பித்திருக்கின்றன.

சேதவிவரங்கள் இன்னும் தெரியவில்லை. (ஐ-க)

# சூரியக் குடும்பத்தில் புதிதாக 10ஆவது கிரகம் கண்டுபிடிப்பு

## சிவப்பு நிறத்தில் சிந்தை கவரும் கோள்

கலிபோர்னியா,மார்ச்18

சூரியக்குடும்பத்தில் 10ஆவது புதிய கிரகம் ஒன்றை விண்வெளி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சூரியனில் இருந்து ஆயிரத்து 700 கோடி கிலோமீற்றர் தொலைவில் உள்ள இந்தக் கிரகத்திற்கு 'செட்னா' என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள்.

சூரியனை மையமாக வைத்து புமி, செவ்வாய், சனி, சுக்கிரன் போன்ற கிரகங்கள் சுற்றிவருகின்றன. இந்தக் கிரகங்கள் அனைத்தும் தம்மைத் தாமே சுற்றிக்கொண்டு சூரியனை நீள் வட்டப்பாதையிலும் சுற்றிவருகின்றன.

சூரிய குடும்பத்தில் இதுவரை மொத்தம் 9 கிரகங்கள் இருப்பதாக விண்வெளி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். கடைசியாக 9 ஆவது கிரகமாக புளுட்டோ 1930 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

விண்வெளியில் சூரியன் மற்றும் பிறகிரகங்கள் போல் மேலும் ஏராளமான கிரகங்கள், துணைக்கோள்கள, விண்கற்கள் போன்றவையும் சுற்றிவருகின்றன.

சூரிய குடும்பத்தைப் போல வேறு ஏதாவது கிரக மண்டலங்கள் இருக்கின்றதா? பூமியைப்போல மனிதன் வசிக்கத்தகுந்த கிரகங்கள் உள்ளதா? என்று விண்வெளி விஞ்ஞானிகள் ஆய்வுநடத்தி வருகின்றனர்.

அமெரிக்கா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த விண்வெளி விஞ்ஞானிகள் புதிய கிரகங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா' நிதியுதவியுடன் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் இத்தகைய ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று கலிபோர்னிய தொழில்நுட்பக் கழகம்.

இந்த ஆராய்ச்சி நிறுவனம் சூரிய குடும்பத்தின் 10ஆவது புதிய 'கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளது.

டாக்டர் மைக் பிரவுண் தலைமையில் விஞ்ஞானிகள் சக்தி வாய்ந்த தொலைநோக்கிகள் மூலம் விண்வெளியை ஆராய்ந்தனர். அப்போது சிவப்பு நிறத்தில் ஒரு புதிய கிரகம் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

புதிய கிரகத்திற்கு 'செட்னா' என்று அவர்கள் பெயரிட்டுள்ளனர். 'செட்னா' என்பது கிரேக்க பெண் கடவுள்களில் ஒன்றாகும். ஆர்டிக் கடலில் உள்ள உயிரினங்களைப் படைத்தது 'செட்னா' பெண் தெய்வம்தான் என்று நம்பப்படுகின்றது.

சூரியனில் இருந்து வெகுதொலைவில் உள்ள கிரகமாக 'செட்னா' திகழ்கிறது. சிவப்பு நிறத்தில் காணபடும் இந்தக் கிரகம் உறைந்த நிலையில் காணப்படுகிறது. 'உறைந்த நிலையில் உள்ள பளபளக்கும் சிவப்பு உலகம்' என்றும் இதனை விஞ்ஞானிகள் அழைக்கின்றனர்.

800 முதல் ஆயிரத்து 100 மைல் விட்டம் கொண்ட 'செட்னா' கிரகத்தில 240 டிகிரி சென்டிகிரேட்டு (மைனஸ் 400 டிகிரி பாரன்ஹீட்) வெப்பநிலை உள்ளது. சூரியனின் வெப்பம் சரியாகப் படாத நிலையில் உறைபனியாக இந்தக் கிரகம் காட்சி அளிக்கிறது.

செட்னா கிரகம் பற்றிய முக்கிய தகவல்கள் வருமாறு:-

★சூரிய குடும்பத்தில் செவ்வாய்க் கிரகத்துக்கு அடுத்தபடியாக இருக்கும் சிவப்புக் கிரகம் செட்னா.

★சூரியனில் இருந்து ஆயிரத்து 700 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் 'செட்னா' கிரகம் உள்ளது.

★பூமியில் இருந்து ஆயிரத்து 300 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் 'செட்னா' உள்ளது.

★புளுட்டோ கிரகத்தைப் போல முக்கால் பங்கு அளவு கொண்டது 'செட்னா'.

★'செட்னா' கிரகத்தின் விட்டம் ஆயிரத்து 180 முதல் 2 ஆயிரத்து 360 கிலோ மீற்றர் வரை. (முழுமையான ஆய்வுப்பணி முடிந்த பிறகுதான் 'செட்னா' கிரகத்தின் சரியான விட்ட அளவு தெரியும்.)

★2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம 14ஆம் திகதி 'செட்னா' கிரகம் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது அதற்கு "2003 விபி 12" என்று குறியீட்டு எண் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து நடந்த ஆய்வுகளுக்குப் பிறகு 'செட்னா' என்று பெயர்சூட்டப்பட்டது. சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றிவரும் 'செட்னா' கிரகம், 10 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் சூரியனுக்கு அருகில் நெருங்கிவரும். 'செட்னா' கிரகம் தன்னைத்தானே சுற்றுவதும் மிக மெதுவாக நடைபெறுகிறது. 'செட்னா' கிரகத்துக்கு என்று தனிச்சந்திரனும் இருக்கிறது.

விண்வெளியில் சூரிய குடும்பத்தின் பத்தாவது கிரகமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'செட்னா' பற்றிய ஆய்வுகளை விண்வெளியில் சுழன்றுகொண்டிருக்கும் 'ஹப்பிள் டெலஸ்கோப' மூலம் செய்திடத் திட்டமிட்டுள்ளனர். (ஐ-க)



பலஸ்…ஈத்தில் இஸ்ரேலியர்கள் நடத்திய ரொக்கெட் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத தெரிவிக்கும் ஆயுததாரிகள்.

# பிறந்தநாள் வாழ்த்து
## 18-03-2004



செல்வன்

## கௌசிகன்

ஜீவேந்திரா - இந்திராணி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
கௌசிகன்
தனது 12ஆவது பிறந்த நாளை இன்று
18.03-2004 வியாழக்கிழமை
சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, அப்பா, அன்புத் தம்பி துவாரகன், றமணன் அண்ணா, றங்கனி அக்கா, பெரியம்மா, பெரியப்பா, மாமா, மாமி, டாலி அக்கா, லண்டனில் வசிக்கும் அப்பம்மா, அனோமாமி, அபாஅக்கா, ஆனந்தி மாமி, சுபா மாமி,ரவிப் பெரியப்பா, மோகனாப் பெரியம்மா, பாலா சித்தப்பா அனைவரும் பல்கலையும் கற்று சிறப்பாக வாழ வைரவப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றனர்.

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
ரவி பெரியப்பா
(லண்டன்).

(சி-33683) (26)

---

உ



காரைநகர்-மணற்காடு அருள்மிகுதேவி
## கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயம்
## ரதோற்சவம்

19.03.2004 பங்குனி 6ஆம் நாள் வெள்ளிக்கிழமை
வேள்வி (வருடாந்தப் பொங்கல்)
23.03.2004 பங்குனி 10 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(வேள்வி தினத்துக்கான உயிர்க் காணிக்கைகளை
ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கவும்)

பிரதமகுரு,
சிவபிரம்மஸ்ரீ
நா.ஞானசம்பந்தக் குருக்கள் (சி-33677)(18-11-19-21)

ஆலயப்
பொறுப்பாளர்,
வே.நடராஜா.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.சி.கார்த்திகேசு

வேலணை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வேலணை பிரதேச செயலர் பிரிவிற்கான கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தலைவருமான திரு.சி.கார்த்திகேசு அவர்களுக்கு சமாதான நீதிவான் பதவி கிடைத்தமையையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வேலணை தெற்கு, வேலணை. டாக்டர் கந்தையா நவரத்தினம் குடும்பத்தினர்.

(29749)(26-11-19-21)

---

## நன்றி தெரிவித்தலும் பாராட்டி வாழ்த்தலும்



### செல்வி பரமதாஸ் சுகீர்த்தனா
### (பெற்ற புள்ளி 128)

யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவியும் மாலிசந்தி **திரு.திருமதி பரமதாஸ் யோகரத்தினம்** தம்பதிகளின் செல்வப் புதல்வியுமாகிய சுகீர்த்தனா அவர்கள் 2003இல் நடைபெற்ற 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 128 புள்ளிகள் பெற்றுச் சித்திபெறக் கல்வியூட்டிய பாடசாலைச் சமூகத்திற்கும் வகுப்பு ஆசிரியை **திருமதி தி.தேவரஞ்சினி** பிரத்தியேகமாக கல்விகற்பித்த **திருமதி தி.சிவாஜினி** ஆசிரியை ஆகியோருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றிகளையும் பாராட்டுக்களையும் வழங்குவோர்:
பெற்றோர், சகோதரர்கள்.

(சி-33681)(26-21-11-19)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உரும்பிராய் தெற்கைச் சேர்ந்தவரான
### சிவஸ்ரீ சி.கதிர்காமநாதக் குருக்கள்

அவர்கள் அண்மையில் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானக நியமனம் பெற்றுள்ளார்.

கோண்டாவில் கிழக்கு, அற்புத நர்த்தன விநாயகர் ஆலய பிரதமகுருவான இவர் சமாதான நீதிவானாக நியமிக்கப்பெற்றதையிட்டு நாம் மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் இவரது அளப்பரிய சேவை மேன் மேலும் நன்கு பரிணமித்து வளர்ச்சியுறவும் வாழ்வில் இன்னும் பல உயர்வுகள் பெறவும் பல்லாண்டு காலம் வாழவும் எல்லாம் வல்ல எங்கள் குலதெய்வமாகிய உரும்பிராய் ஸ்ரீஞானவைரவப்பெருமானைப் பிரார்த்தித்து வணங்குகின்றோம்.

உரும்பிராய்.
(29772) (26-11-21-11)

திரு.த.சின்னத்துரை குடும்பத்தினர்,
சிவஸ்ரீ சி.கதிரவேல் குருக்கள் குடும்பத்தினர்.

---

# உணவகங்களில் சோதனை

யாழ்ப்பாணம்,மார்ச்18

தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் கடந்த சில தினங்களாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.நகரப்பகுதி உட்பட பருத்தித்துறை, கொடிகாமம், சுன்னாகம், நெல்லியடி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு போன்ற பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது காலாவதியான, பாவனைக்குதவாத பொருள்கள் கைப்பற்றப்பட்டு வியாபார நிலையங்களின உரிமையாளர்களின் அனுமதியுடன் அவை அழிக்கப்பட்டுள்ளன.

ஜூஸ் பைக்கற்றுக்கள் மற்றும் கன்டோஸ் என்பனவே இவ்வாறு அழிக்கப்பட்டன. (ம-10-ரி)

## நீரிழிவு நோய் இலவசப் பரிசோதனை

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள அன்னை நாகா பூட் சிற்றியின் முதலாமாண்டு நிறைவையொட்டி 'ஹேமாஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னை நாகா பூட் சிற்றியின் (175, கே.கே.எஸ் வீதி, யாழ்.) இலவச நீரழிவுப் பரிசோதனை முகாம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-10)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், மார்ச்18

போராளிக் கவிஞர் அம்புலியின் 'மீண்டும் துளிர்க்கும் வசந்தம்' நூல் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுளளது.

நிகழ்வில் தேசியக் கொடியேற்றல் பொதுச்சுடரேற்றல் ஆகியவற்றைத் தொடர்ந்து உரைகளும் நூல் வெளியீடும் இடம்பெறும். (ம-10)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம் மார்ச்18

இந்து கலாசார அமைச்சின் யாழ்-மாவட்ட பிராந்திய அலுவலகம் உரும பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் ஆதரவுடன் நடத்தும் ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இந்துகலாசார அமைச்சின் உதவிப்பணிப்பாளா சிவமகாலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் சந்திரோதய வித்தியாசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ஆசிரியர்கள் எஸ். ஜெய சோதிவரதன் திருமதி ஜெ.வேல் ராஜா ஆகியோரின் ஆன்மீகச்சொற் பொழிவுகளும் இடம்பெறும். (ம-ரி)

---

## விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரத்தில்
அனுபவம் வாய்ந்தவர்களும்
பழக விரும்புபவர்களும்
(ஆண், பெண் இருபாலாரும்)
தேவைப்படுகின்றனர்.
உடனே நேரில் வரவும.
**அங்கவின் ரெக்ஸ்ரைல்ஸ்,**
55, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(29769) (18-11-19-21)

---

## இந்தியாவில் உயர்கல்வி பெற இப்போதே தயாராகுங்கள்!

க.பொ.த. உயர்தரத்தின் பின்னர் இணைந்து கொள்ளுங்கள்!

"பிருந்தாவன் கல்லூரி"
(முன்னைய நாஷனல் பெஸ்ட் கிறேற் கொலிஜ்)
பெங்களூர் பல்கலைக்கழகம்,
இந்தியா

**பட்டப்படிப்புக்கான கற்கை நெறிகள்**
B.B.M., B.Sc., B.C.A.,
B.Com.+ Computer

**பட்டப்பின் படிப்புக்கான கற்கைநெறிகள்**
M.B.A, M.Sc., M.C.A.

இம்மாதம் 21ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் காலை 10 மணிக்கு கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. கற்கைநெறிகளுக்கான அனுமதி அதே இடத்தில்: மார்ச் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் காலை 11 மணிமுதல் மாலை 5 மணிவரை.

※ ஸ்ரீ லங்காவைச் சேர்ந்த 261 மாணவர்களுடனும், 41 வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடனும் இணைந்து கல்வி கற்கும் வாய்ப்பு.
※ கடந்த பத்தாண்டு காலத்தில் இக்கல்லூரியில் பயின்ற ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 250 மாணவர்கள் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்றுள்ளனர்.
※ பதிவுக்கட்டணம் செலுத்தாது இடஒதுக்கீட்டுவசதி மற்றும் புலமைப் பரிசில் வாய்ப்பு, கட்டணச் சலுகை, தவணைக்கட்டணச் சலுகை தொடர்பாக கருத்தரங்கில் விவரங்கள் வெளியிடப்படும்.
※ 2004 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பெறுபேற்றை எதிர் பார்க்கும்வேளையிலும் இட ஒதுக்கீட்டுக்கு விண்ணப்பிக்கமுடியும்.
※ இடஒதுக்கீட்டுக்கான கட்டணம் 400 அமெரிக்க டொலர்கள்.
※ இணையத்தளம்
※ www.nfgcollege.com.
※ மின் அஞ்சல்
※ nfgc@bgl.vsnl.net.in.

கம்பெனி செக்கிரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
இல: 285 c-1/1, ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை,
நுகேகொட:தொலைபேசி இல:011-2854438.

(84-11-19-21) (C2885)

---

# வடமராட்சியில் மகளிர் சாதனை காண வாரீர்

தூரிகை நுண்கலை வளாகம் வழங்கும்
பல்துறை கலைகள் சார்ந்த

## கண்காட்சி - 2004

இடம்: தூரிகை நிறுவனம்
ம.ம.வி. வீதி, நெல்லியடி
காலம்: 20,21.03.2004 சனி, ஞாயிறு
காலை முதல் மாலை வரை

ஒவ்வொரு மகளிரும் காணவேண்டிய காட்சிப படுத்தல் இது.

*அனைவரும் வருக!*

நிறுவனத்தினர்.

(சி-33679)(18-21-11-19)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
09 - 11 - 1925



மறைவு
17 - 02 - 2004

## திருமதி நடராசா கனகம்மா

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து
பாசத்துடன் வளர்த்தாய் பாரினிலே அன்று
எமை ஆளாக்கி நடமாடவிட்டீர்கள் ~ இன்று
எமை இங்கு தவிக்கவிட்டு நீங்கள் எங்கு
சென்றீர்கள்? என்றும் உங்கள் நினைவுடன்
எங்கள் உடம்பு ஊசலாடும்.

17-02-2004 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக்கிரியைகள் இன்று (18-03-2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'பவளவாசா',
573, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(29766) (19-11-21-)

---

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை செல்வரத்தினம்



திருநெல்வேலி, கலாசாலை வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை செல்வரத்தினம் அவர்கள் நேற்று (17.03.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புக் கணவரும் செல்வகுமார் (லண்டன்), செல்வச்சந்திரன் (இத்தாலி), செல்வசேகரன் (லண்டன்), செல்வநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2004) வியாழக்கிழமை ந.ப. 12.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதிபுலம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.

தகவல்:
சந்திரன் குடும்பத்தினர்.

(29768) (26)

உதயன்

# பதவி அந்தஸ்துக்கு பொருத்தமற்ற போக்கு

தேர்தலை ஒட்டி அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்வது குறித்துப் பல்வேறு குற்றச் சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

தேர்தலைக் கண்காணிக்கும் ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புக் குழுவிடமும் இவ்விவகாரம் தொடர்பாகப் பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதிக முறைப்பாடுகள் ஜனாதிபதிக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருப்பது தான் குறிப்பிடத்தக்க அம்சம்.

அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு விசேட சலுகைகள், அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் தலைவரான ஜனாதிபதிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எதுவுமே எடுக்கமுடியாது. அதற்குரிய விசேட சட்ட விலக்களிப்பு அவருக்கு உண்டு.

நாட்டின் தலைவர் என்ற வகையில் வழங்கப்பட்டுள்ள இந்த உயர் அந்தஸ்தை, எதிர்க்கட்சிகளின் தலைவி என்ற முறையில் - மூன்றாந்தர அரசியல் வாதிகளின் போக்கில் - அவர் பயன்படுத்துவதே மிகுந்த விசனத்துக்குரியதாகும்.

நாடாளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த அரசை - நான்கு வருட காலம் முன்னதாக - கலைத்துத் தேர்தலுக்கு உத்தரவிட்டார் ஜனாதிபதி.

அந்த உத்தரவில் ஒப்பமிடுவதற்கு ஓரிரு மணித்தியாலங்களுக்கு முன்னரே தேர்தல் தொடர்பான பித்தலாட்ட ஏற்பாடுகள் அரங்கேறத் தொடங்கிவிட்டன.

சர்வதேச, நாடாளுமன்ற - ஜனநாயக - பாரம்பரியங்களுக்கு மாறாக, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்ட அரசு இருக்கத்தக்கதாக, அந்த அரசின் பிரதமருக்குக் கூடத் தெரியாமல், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன.

அந்தப் பதவிகளுள் ஒன்று ஊடகத்துறை அமைச்சு.

தேர்தல் அறிவிப்பின் பின்னர் அரச ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு இடப்பட்ட அத்திபாரமே அது.

தேர்தலை ஒட்டிய அரச ஊடகங்களின் செயற்பாட்டைப் பார்த்து இன்று சந்தி சிரிக்கின்றது. ஜனாதிபதியின் தரப்பு அரசியல் அணியின் பிரசார ஊடகங்களாகவே அவை மாறியிருக்கின்றன.

இவை தவிர, அரச வளங்களைத் தேர்தலை ஒட்டித் தவறாகப் பயன்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பல.

★ சுயாதீன பொலீஸ் ஆணைக்குழுவின் பணிப்புரையையும் மீறி - ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் - அவரது அணியினருக்குச் சார்பான பொலீஸ் அதிகாரிகள் அந்த அணியினர் விரும்பும் இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

★ தேர்தல் நிதிக்கு வளம் தரக்கூடிய லொத்தர் சபைகள் போன்றவற்றை ஜனாதிபதி அவசர அவசரமாகத் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருக்கின்றார்.

★ ஜனாதிபதி மாளிகையை, தேர்தல் பிரசாரக் கூட்ட நடவடிக்கைக்குப் பயன்படுத்துகிறார்.

★ தனக்கு விரும்பிய வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் என்ற பெயரில் இராணுவப் பிரிவுகளை அவர்களது இடத்துக்கு நகர்த்துகின்றார்.

★ வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி விளம்பர மாடங்களில் ஜனாதிபதியின் பாரிய சுவரொட்டிகளை ஒட்டும்படி பணித்துள்ளார்.

- இப்படி ஜனாதிபதிக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

அரசமைப்பைப் பேணிக் கடைப்பிடிப்பேன் என்று தெரிவித்து சத்தியப்பிரமாணம் எடுத்து, பதவியேற்றவர் ஜனாதிபதி, இப்போது பிரதமர் ரணிலின் அரசைக் கவிழ்த்தது வரை தனது ஒவ்வொரு நடவடிக்கையும் அரசமைப்பைப் பாதுகாப்பதற்கானதே என்று முழங்கியும் வந்தவர் அவர்.

ஆனால், நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனம் மட்டும் அதிகமாகப் பெற்று ஆட்சி அமைத்தால் அதை வைத்துக்கொண்டு இந்த அரசமைப்பையே மாற்றுவேன் என்று இந்த அரசமைப்புக்கு எதிராகவே இப்போது புதுக்கதை விடுகிறார் அவர்.

நாடாளுமன்றில் மூன்றில் இருபங்கு எம்.பிக்களின் ஆதரவுடன் மட்டுமே அரசமைப்பை மாற்றவோ, திருத்தவோ முடியும் என்று அரசமைப்பு திட்டவட்டமாகக் கூறுகின்றது. அதையும் மீறி - அதற்கு மாறான வகையில் - அரசமைப்பை மாற்றியமைப்பேன் என்று ஜனாதிபதி கூறுவதே ஒரு வகையில் அரசமைப்பு மீறல் தான்.

இவ்வாறாகத் தனது பதவி அந்தஸ்தையே கேலிக்குள்ளாக்கும் ஒருவரின் கைகளில் இப்பதவி சிக்கியது, இலங்கைத் தீவைப் பொறுத்தவரை பரிதாபத்துக்கு உரிய ஒரு விடயம் தான்!

# ஒய்வூதியம் பெறுவோர் விவரம் குடாநாடு முழுவதும் மீளாய்வு

## முறைகேடுகள் இடம்பெறுவதான முறைப்பாடுகளை அடுத்து நடவடிக்கை

வலி. மேற்கு,மார்ச்18

யாழ். குடாநாட்டில் ஓய்வூதியம் பெறுவதில் முறைகேடுகள் இடம்பெறுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து சகல பிரதேச செயலகங்களிலும் ஓய்வூதிய மீளாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனின் பணிப்பிற்கிணங்க சகல பிரதேச செயலகங்களிலும் ஓய்வூதியம் பெறுபவர்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்படுகின்றது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் பிரதேச செயலகங்களில் ஏப்ரல் மாதத்துக்கான ஓய்வூதியப் பற்றுச்சீட்டை நேரடியாகச் சமுகமளித்தே பெற்றுக்கொள்ளமுடியும். இது தொடர்பாகச் சகல பிரதேச செயலகங்களிலிருந்தும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தபால் மூலம் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் அரச அதிபருக்குக் கிடைத்தமையினாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் கடமைபுரியும் சகல கிராம அலுவலர்களும் தமது பகுதிகளில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தொடர்பான அறிக்கையினைப் பிரதேச செயலகங்களுக்குச் சமர்ப்பித்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிராம அலுவலர்களின் வருடாந்த சம்பள ஏற்றம் தொடர்பாக ஓய்வூதியம் பெறுபவர்களின் அறிக்கை பரிசீலனை செய்யப்படுகின்றது.

இந்த நிலையிலேயே இறந்தவர்களின் பெயரில் ஓய்வூதியம் பெறப்படுவதாகவும் வேறு முறைகேடுகள் இடம்பெறுவதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனையடுத்தே மீளாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-175)

# கசிப்பு வழக்குகளில் இருவருக்கு தலா இரண்டு வருடக் கடூழியச்சிறை

யாழ்ப்பாணம்,மார்ச்18

கசிப்பு வழக்குகளில் குற்றஞ்சுமத்தப்பட்ட இருவருக்கு யாழ். நீதிமன்றம் தலா இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கசிப்பு வைத்திருந்தமை, அதனை விற்பனை செய்தமை மற்றும் அதனை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் ஐந்து சந்தி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப்துல் ஜபார் கசீர் என்பவரையும் காதி அபூபக்கர் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த பாஸ்கரன் ஜெயகௌரி என்பவரையும் யாழ். பொலீஸார் கடந்த திங்களன்று கைதுசெய்தனர்.

இருவரும் யாழ். நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். தமது குற்றங்களை அவர்கள் ஏற்றுக்கொண்டதை அடுத்தே இருவருக்கும் தலா இரு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அப்துல் ஜபார் கசீரை 60 ஆயிரம் ரூபாவும், பாஸ்கரன் ஜெயகௌரியை 75 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணமாகச் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட தண்டப் பணத்தைச் சிறைத்தண்டனை அனுபவிக்கும் காலத்திற்குள் செலுத்தவேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் மேலும் இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் மூவர், கோப்பாய் பொலீஸ் அதிகாரி ஸ்ரீசெல்வம் தலைமையிலான குழுவினால் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மூவரில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ஞானராசா மெரின் என்பவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 10 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்தவர்களான பாலசிங்கம் யசோதா, செல்வராசா கிறில் இரத்தினம் ஆகிய இருவரையும் தலா 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தலா 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.(ம-5)

# முன்னுரிமைப்படி சுகாதாரத் தொண்டருக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி,மார்ச்18

வடக்கு - கிழக்கில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கில் யுத்த காலத்தில் பல வைத்தியசாலைகளிலும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நிரந்தர ஊழியர்களுக்குப் பற்றாக்குறை நிலவிய காரணத்தினால் இந்தச் சுகாதாரத் தொண்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களுக்கான கொடுப்பனவுகள்கூட ஒழுங்காக வழங்கப்படாத நிலையிலும் இரவு பகலாக இவர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

குறிப்பாக மருத்துவ மாதுக்களின் பற்றாக்குறை நிலவிய வேளைகளிலெல்லாம் இவர்களின் சேவை பெரிதும் உதவியுள்ளதுடன், தற்பொழுதும் உதவி வருகின்றது. இவர்களின் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாகப் பலருடனும் பல தடவைகள் நாம் தொடர்புகொண்டு தெரிவித்திருந்தோம்.

இவர்களும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கடிதங்கள் வாயிலாகவும் அமைதியான போராட்டங்கள் மூலமும் பலமுறை கேட்டிருந்தனர். தற்பொழுது பலரது வேண்டுகோள்களுக்கு இணங்க மருத்துவ மாது பயிற்சிக்கு ஆள்சேர்ப்புச் செய்யவுள்ளதாக அறிகின்றோம். எனவே, இவர்களுக்கு இதில் முன்னுரிமை வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.

இந்தப் பயிற்சி நெறிக்குச் சேர்த்துக்கொள்வதற்குரிய கல்வித் தகைமை போதாதிருக்கும் ஏனைய தொண்டர்களை வேறு பணிகளில் நிரந்தரமாக்க அல்லது தற்காலிக நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம-10)

# கொழும்புத் தமிழ்ச் சங்க விழா

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகதின விழா எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் மாலை 5.30 மணிக்கு சங்கத் தலைவர் பெ.விஜயரெத்தினம் தலைமையில் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி க.கனகஈஸ்வரனும் சிறப்பு அதிதியாக தொழிலதிபர் சி.முத்தையாவும் கலந்துகொள்ளவுள்ளனர். 'அன்றும் இன்றும் என்றும் திருக்குறள்' என்ற தலைப்பில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர்.கோபிநாத் சிறப்புரையாற்றுவார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் க.ஸ்ரீபவனும் சிறப்பு அதிதியாக வர்த்தக வங்கியின் சர்வதேச பொறுப்பதிகாரி செ.இராகவனும் கலந்துகொள்ளவுள்ளனர். 'மட்டக்களப்பில் புனைகதை இலக்கிய வளர்ச்சி' என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி றூபி வலன்ரினா பிரான்சிஸ் சிறப்புரையாற்றுவார்.

விழாவில் தமிழ்ச் சங்கத்தின் மூத்த உறுப்பினர்களான கலாநிதி சபாஜெயராசா, வைத்திய கலாநிதி இ.விக்கினராஜா, பேராசிரியர் சி.தில்லைநாதன் ஆகியோர் 'சங்கச் சான்றோன் - 2004' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-10)

# வானில் வந்தவர்களால் குடும்பப் பெண் கடத்தல்

யாழ்ப்பாணம்,மார்ச்18

வானில் வந்தவர்களால் குடும்பப்பெண் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று காணாமற்போன அன்னமேரி (வயது 32) என்பவரின் தாயார் ஒரு மாதத்தின் பின்னர் கோப்பாய் பொலீஸ் நிலையத்திலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்ற தகராறு ஒன்றில் கடத்தப்பட்ட அன்னமேரியின் தாயார் தலையில் காயமடைந்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தனது தாயாருக்கு உணவு கொடுத்துவிட்டு ஆட்டோ ஒன்றில் வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் வானில் வந்தவர்களால் அன்னமேரி கடத்தப்பட்டார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆட்டோவில் அவரது 10வயது மகனும் இருந்துள்ளார். வானில் வந்தவர்கள் ஓட்டோவை மறித்துத் தனது தாயாரைப் பலவந்தமாக ஏற்றிச் சென்றதை மகன் கண்டுள்ளார்.

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அன்னமேரியின் தாயார் குணமாகி வீடு திரும்பிய பின்னரே - ஒரு மாதம் கடந்த நிலையில் - இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். (ம-7)

# பல்கலை. ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,மார்ச்18

ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று மேற்கொண்ட அடையாள வேலை நிறுத்தத்தினால் பல்கலைக்கழகப் பணிகள் பாதிப்படைந்தன.

நேற்றுக்காலை வழமைபோன்று ஊழியர்கள் அனைவரும் பல்கலைக்கழகத்துக்கு வந்திருந்தபோதும் தமது பணிகளில் அவர்கள் ஈடுபடவில்லை. பாதுகாப்பு மற்றும் நீர் விநியோகப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்கள் வழமைபோன்று ஈடுபட்டனர். ஏனையோர் நண்பகல் வரையும் அங்கு நின்றுவிட்டுத் தமது வீடுகளுக்குத் திரும்பிச்சென்றனர். (ம-10-ரி)

## நாளை

பங்குனி 06
வெள்ளிக்கிழமை
(19.03.2004)
திதி: சதுர்த்தசி
பின்னிரவு 5.10 வரை
நட்சத்திரம்: சதயம்
இரவு 10.15 வரை
சுபநேரம்: 6.18 - 7.48
ராகுகாலம்:10.48 - 12.18
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

குற்றத்தை அனுமதிப்பவன் தான் முதல் குற்றவாளி.

## கொடியவினை தீர்த்தருள்வாய்!

கண்ணெதிரே காணுமெலாம் அநித்தியமென்று
கண்டுரைத்த மறையேட்டைக் கையிற்றாங்கி
எண்ணறிந்தும் எழுத்தறிந்தும் யாப்பால் நன்று
இயற்றநிலை தனையறிந்தும் உடல்நோய்கண்டு
மண்ணகத்தே வாழ்கின்றா ரென்றாலந்த
மர்மமென்ன தர்மமிதா? மனம் நிறைந்தே
வண்ணைநகர் ஆலயத்தில் கொடியை ஏற்றி
கொடியவினை தீர்த்தருள்வாய் வைத்ய நாதா!

- கவிமணி கந்தமுருகேசதாசனார்.

(இன்று வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 2ஆம் திருவிழா)

# ஐ.ம.சு. முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நாட்டின் அரசமைப்புக்கே பெரும் சவால்!

## கடுமையாகச் சாடுகின்றார் அலிசாஹிர் மௌலானா

கொழும்பு,மார்ச்18

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நாட்டின் அரசமைப்புக்கே சவாலாக இருக்கின்றது. அத்தோடு அது சிறுபான்மை இனத்தவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளரான அலி சாஹிர் மௌலானா அபாயக் குரல் எழுப்புகின்றார்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் செய்தியாளர் மாநாட்டிலேயே மௌலானா இவ்வாறு தெரிவித்தார்.

அரசமைப்பில் ஏதாவது மாற்றம் கொண்டுவர வேண்டுமானால் மூன்றில இரண்டு பெரும்பான்மையுடன் அதனை நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும்.

ஆனால், ஜனாதிபதியோ நாடாளுமன்றத்தில் ஓர் ஆசன பெரும்பான்மையில் வெற்றிபெற்றாலும் நாடாளுமன்றத்தையே அரசமைப்பு சபையாக மாற்றி அரசமைப்பை மாற்றி அமைப்பேன் என்கிறார். இது அரசமைப்பு சாசனத்திற்கே விடும் ஒரு சவாலாகும்.

நாட்டில் வாழும் பல்லின மக்களாலும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் அப்பதவியை வகிக்க முடியாது.

ஆனால், ஜனாதிபதியோ தொடர்ந்தும் தான் ஆட்சி அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்ற ஒரே சுயநலத்தால் ஆட்சி முறையையே மாற்றி அமைக்க முனைகின்றார். இது ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கையே தெளிவுபடுத்துகின்றது - என்றார் அலிசாஹிர மௌலானா. (ம-க)

# அச்சுவேலி கொலை வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்18

அச்சுவேலி சித்திரவேலாயுதர் ஆலய உற்சவத்தில் ஏற்பட்ட தகராறின் எதிரொலியாக 2001ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலை தொடர்பான வழக்கு யாழ்.மேல்நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ். சுபாஸ் என்பவரைக் கொலைசெய்ததாக ஆறுபேருக்கு எதிராக இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் இந்த வழக்குத் தொடர்பாக சுருக்க மற்ற விசாரணை இடம்பெற்றது.

இதையடுத்து இந்த வழக்கை யாழ்.மேல்நீதிமன்றத்துக்கு நீதிவான் நேற்றுப் பாரப்படுத்தினார். (ம-3)

# கருணா பதவி நீக்கத்தின் பின்னர் ஈ.பி.டி.பி. தேர்தல் பிரசாரம் தீவிரம்

கருணா விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தும், விசேட தளபதி பதவியிலிருந்தும் நீக்கப்பட்டதன் பின்னர் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஈ.பி.டி.பியின் தேர்தல் பிரசாரம் தீவிரமடைந்திருக்கிறது.

நியமனப்பத்திரத் தாக்கலின் பின்னர் வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து இடைநிறுத்தப்பட்டிருந்த தேர்தல் பிரசாரத்தை ஈ.பி.டி.பியினர் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் புகைப்படம் அடங்கிய சுவரொட்டிகள் எங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

குருமண்வெளி, மண்டூர் உட்பட பல கிராமங்களிலும் ஈ.பி.டி.பியினர் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர்.(க)

# பாதாள உலகக் கோஷ்டி ஆயுதங்களுடன் சிக்கியது!

பலகொள்ளை, கொலைகளுடன் தொடர்புடைய பாதாள உலகக் கோஷ்டியொன்று ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளது.

பொலீஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களையடுத்து இரண்டு ரி-56ரக துப்பாக்கிகள், மூன்று கைத்துப்பாக்கிகள் மற்றும் பெருந்தொகையான ரவைகளுடன் முக்கிய பாதாள உலக நபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிராண்ட்பாஸ் மற்றும் சேதவத்தை பகுதிகளிலேயே ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது. தற்போது சிறைச்சாலையில தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பாதாள உலகத் தலைவர் பிரின்ஸ் என்பவரின சகாக்களே ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த மூன்று நபர்களும் ஏற்கனவே ஐந்து கொலைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாம்.

கொந்தராந்து அடிப்படையில் மேலும் பல கொலைகளைச் செய்வதற்கு எத்தனித்தபோதே பொலீஸாரிடம் அவர்கள் சிக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களில் பொலீஸாரால் நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-க)


## வெளிவந்துவிட்டது

தரம் 5 புலமைப்பரிசில் 2004 பரீட்சைக்கான

அடிப்படை அறிவும் பயிற்சியும்

கே.ரி. அம்பிகைபாகன் B.Ed.

மொழிவளம் - இ.க.சிவஞானசுந்தரம் M.A.

கட்டுரைப்பேழை - இ.க.சிவஞானசுந்தரம் M.A.

தமிழ் (புலமைக்கானது) - இ.க.சிவஞானசுந்தரம் M.A.

கடந்தகால தரம் 5 பரீட்சை வினாவிடைகள் (தென்றல்)

(29521)(26)


## நல்லூர் வணிகர் கழகம் முக்கிய அறிவித்தல்

(1) நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களும் மாதாந்தச் சந்தாப்பணம் செலுத்த வேண்டும்.

(2) இதுவரையும் பதிவுசெய்யப்படாத வர்த்தக நிலையங்கள் யாவும் 31.03.2004இற்கு முன்னர் பதிவுசெய்யப்பட வேண்டும்.

(3) பாதுகாப்புச்சேவை நடைபெறும் இடங்களிலுள்ள எந்தவொரு கடை உரிமையாளர்களும் தவறாமல் பாதுகாப்புச் சேவைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

(4) மருந்தகம், உணவகம், திருத்தகம், தொலைத்தொடர்பகம் தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்கள் யாவும் 21.03.2004 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் முழுநாளும் முழுமையாகப் பூட்டப்பட வேண்டும். இதை மீறுவோர் மீது வர்த்தக சங்க விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

நிர்வாகம்,
நல்லூர் வணிகர் கழகம்.

## நல்லூர் வணிகர் கழகம்

2004-03-07இல் நடைபெற்ற நல்லூர் வணிகர் கழகப் பொதுக்கூட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகசபை உறுப்பினர்கள்:-

| | |
|---|---|
| தலைவர்: | திரு.க.கிருஸ்ணானந்தமூர்த்தி, |
| உபதலைவர்: | திரு.நா.எழில்மோகன், |
| செயலாளர்: | திரு.ச.பிறேமதாசன், |
| உபசெயலாளர்: | திரு.க.கண்ணதாஸ், |
| பொருளாளர்: | திரு.இ.இரத்தினசிங்கம், |
| கணக்காய்வாளர்: | திரு.செ.திருப்பதி |

ஏனைய உறுப்பினர்கள்:

| | |
|---|---|
| திரு.வெ.செல்லையா | திரு.ஆ.கேசவன் |
| திரு.ச.சசிதரன் | திரு.ஆ.பாலதீபன் |
| திரு.க.ரவி | திரு.வே.சத்தியசீலன் |
| திரு.ச.சிவகுமார் | திரு.இ.சசிக்குமார் |
| திரு.வொ.ஜெயந்தன் | திரு.இ.நந்திக்கேஷ் |

செயலாளர்,
நல்லூர் வணிகர் கழகம்.

(29740) (26-21-1914)

## கலைப்பீட மூன்றாம் வருட மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கலைப்பீட 3ஆம் வருட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

## சித்திரமும் வடிவமைப்பும் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சித்திரமும் வடிவமைப்பும் (ART and DESIGN) துறையின் முதல் தொகுதி மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு வெளியாகின.

பரீட்சை தொடர்பான முடிவுகளை யாழ். பல்கலைக்கழகத்திலும், நுண்கலைப்பிரிவிலும் அறிவித்தல் பலகைகளில் பார்வையிடலாம். (ம-83)

# கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.கல்வி வலயத்தில் முதன்மை ஆசிரியராகப் பணியாற்றி அண்மையில் இளைப்பாறிய வே.கைலைநாதனின் பிரிவுபசார விழாவில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நினைவுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-10)



உரும்பிராய் சென்.மைக்கல் முன்பள்ளியின் ஆசிரியர், மாணவர் கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது உரும்பிராய் கிழக்கு கிராம அலுவலர் செ.விக்னராஜா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். நிலையத் தலைவர் நா.இராசநாயகம், ஆசிரியர் ஞா.அன்ரன் பிரேமதாஸ் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)



வேலணை கிழக்கு மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி சோ.தில்லைநாதன் மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-10)



யாழ்.சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.சுதாகர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்: குருநகர்ச் செய்தியாளர்

# மட்டு.- அம்பாறை மாவட்டத்தில் போராளிகள் சூழ்நிலைக் கைதிகளாகவே இருக்கின்றனர்

## அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் செவ்வி



யாழ்ப்பாணம்,மார்ச்18

மட்டு. - அம்பாறை மாவட்டத்தில் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் வரையான போராளிகள் சூழ்நிலைக் கைதிகளாக உள்ளனர் என்று மட்டு.- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.கௌசல்யன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அவர் உதயனுக்கு அளித்த செவ்வியில் இதைத் தெரிவித்தார்.

அச்செவ்வியில் அவர் அளித்த விவரங்கள் வருமாறு:-

*கேள்வி*: மட்டக்களப்பில் நிலைமை இப்போது எப்படி உள்ளது?

*பதில்*: மக்கள் மத்தியில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. இதுவரை காலமும் வெளியூர்ப் பத்திரிகைகள் அங்கு செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. கடந்த சில தினங்கள்தான் பத்திரிகைகள் அங்குசெல்ல அனுமதித்துள்ளார்கள். இப்போதுதான் மக்களுக்கு உண்மை நிலை புரிய ஆரம்பித்துள்ளது.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் முக்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். போராட்டத்தின் முக்கியத்துவத்தையும், நிலைப்பாட்டையும் அந்த அறிக்கை தெளிவாகத் தெரிவிக்கின்றது. இதையடுத்து மக்கள் தெளிவடைந்துள்ளனர். அங்குள்ள மக்களுடன் தொடர்பு கொண்டு கதைக்கும்போது, அவர்கள் நல்ல தெளிவு நிலையில் உள்ளதை உணர்ந்தோம்.

போராளிகளும் சூழ்நிலைக் கைதிகளாக அங்கே இருக்கின்றார்கள். போராளிகளில் இருந்து கருணாவைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந்த விடயத்தில் பொதுமக்களோ, போராளிகளோ இரத்தம் சிந்தாமல் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று எமது தலைவர் விரும்புகின்றார். எமது அமைப்புக்குள் ஏற்பட்ட பிரச்சினையாக இதைக் கருதி, பேசி நல்லமுடிவை எடுக்க வேண்டும் என்பதுவே தலைவரின் நிலைப்பாடாகும்.

இதன் காரணமாகப் படிப்படியாக நடவடிக்கைகளும் முன்னேற்றங்களும் மாற்றங்களும் நடந்துகொண்டிருக்கின்றன. விரைவில் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்குவதற்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

இந்த விடயத்தில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் மக்கள் தெளிவடைந்து இருப்பதுதான் நல்ல முன்னேற்றமாகும். இதுதான் அங்குள்ள தற்போதைய சூழ்நிலை.

*கேள்வி*: எப்போது தளபதிகளும் பொறுப்பாளர்களும் கிழக்குக்குப் போகத் திட்டமிட்டுள்ளீர்கள்?

*பதில்*: இங்கிருந்து சில வேலைகள் செய்யவேண்டியுள்ளது. தளபதிகள் விரைவில் அங்கே போக இருக்கிறார்கள். அவர்கள் ஊடாகப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டவுடன் நாம் அங்கு போவோம். அதன்பின் எமது பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

*கேள்வி*: கருணாவுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவருகின்றன. அது குறித்து...?

*பதில்*: அவருக்கு நிதி நெருக்கடி வரும் என்பது எமக்குத் தெரியும். இந்த விடயத்தில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். விடுதலைப் போராட்டத்துக்குத்தான் நிதி ஆதரவு வழங்கப்படுகிறதே தவிர, தனிப்பட்ட வேறு நோக்கத்துக்காக நிச்சயமாக நிதி உதவி வழங்குவதில்லை என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். இன்றைய முரண்பாடான, சிக்கலான நேரத்தில் கட்டாயப்படுத்தித்தான் நிதியைப் பெறவேண்டிய நிலை கருணாவுக்கு ஏற்படலாம் இதில் சந்தேகம் இல்லை.

*கேள்வி*: தேர்தல் பிரசாரங்கள் எப்படியுள்ளன?

*பதில்*: தேர்தல் பிரசாரங்கள் மந்தமாக இருந்தாலும் வேட்பாளர்கள் மூலமாகப் பிரசாரங்கள் நடக்கின்றன. தேர்தல் குழப்பம் இல்லாமல் நடக்கும் என்று நம்புகின்றோம்.

*கேள்வி*: கருணாவின் கைதிகளாக உள்ள போராளிகள் நிலை எப்படி உள்ளது?

*பதில்*: போராளிகளுக்கு உண்மையான நிலைமை சென்றடையவில்லை. பத்திரிகை பார்க்கவும் றேடியோ கேட்கவும் அவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினையின் உண்மை நிலைமை போராளிகளைச் சென்றடைய ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். அதன் பின்புதான் உண்மை நிலையை, தலைமையின் நிலைப்பாட்டை அவர்கள் உணர்வார்கள்; அதன்படி அவர்கள் நடப்பார்கள்.

*கேள்வி*: அங்கு எவ்வளவு போராளிகள் இருக்கின்றனர்.

*பதில்*: 3ஆயிரம் முதல் 4ஆயிரம் வரையில் போராளிகள் அங்கு இருக்கின்றனர்.

*கேள்வி*: இந்தப் போராளிகள் எல்லோரும் கருணாவின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றார்களா?

*பதில்*: மட்டு. - அம்பாறை மாவட்டத்தில் அவர்கள் இருக்கின்றார்கள். எல்லோரும் அவருடன் என்று இல்லை. பல இடங்களிலும் பிரிந்து பிரிந்து நிற்கிறார்கள்.

*கேள்வி*: நேரடியாகக் கருணாவின் கட்டுப்பாட்டில் இல்லை என்று கூறுகிறீர்களா?

*பதில்*: நேரடியாகக் கருணா அங்கு நிற்கிறார். போராளிகளும் அங்குதான் நிற்கின்றனர். ஆனால், அவருக்குப் பக்கத்தில் இல்லை. தள்ளித்தள்ளி நிற்கின்றார்கள்

*கேள்வி*: ஜனாதிபதியுடன் கருணா தொடர்பு வைத்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன அதுகுறித்து...?

*பதில்*: இப்படி ஒரு கதை உள்ளது. இப்போது படுமோசமான, கீழ்த்தரமான செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டுள்ளார். யாருக்கு எதிராக எமது விடுதலையை வென்றெடுக்கப் போராடினோமோ அவர்களுக்குச் சாதகமான வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார் - என்றார்.

கௌசல்யனுடன் யாழ்ப்பாணம் வந்திருந்த விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் எஸ்.கரிகாலன் உதயனுக்கு வழங்கிய சிறு செவ்வியின் விவரம் வருமாறு:-

*கேள்வி*: மட்டு. நிலைமை எப்படி உள்ளது?

*பதில்*: வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வதாகக் கருணாவின் அடியாள்கள் அறிவித்தனர். ஆனால், 2 நாளில் உண்ணாவிரதம் நின்றுவிட்டது. இதில் இருந்து மக்கள் தெளிவாக இருப்பதை உணரமுடிகின்றது.

*கேள்வி*: கருணாவுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளிவருகிறது குறித்து...?

*பதில்*: நிதி நெருக்கடி ஏற்பட்டு அவர், வர்த்தகர்களிடம் உதவி கோரியுள்ளார். போராளிகளுக்கு உணவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக, அறிகின்றோம் - என்றார்.

(ம-3)

# பைகளில் அடைக்கப்பட்ட நிலையில் போதைப்பொருள் வவுனியாவில் சிக்கியது

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் வைத்து 63 சிறிய பைகளில் அடைக்கப்பட்ட போதைப்பொருளை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தவராசா என்பவரும் கைதுசெய்யப்பட்டு இருக்கின்றார்.

இரகசிய தகவல் ஒன்றையடுத்து தேடுதல் நடத்திய பொலீஸ் விசேட குழு ஆயிரத்து 230 மில்லிகிராம் போதைப்பொருளையும் சந்தேகநபரையும் கைதுசெய்துள்ளனர். வவுனியாவில் தற்போது போதைப்பொருள் பாவனை குறைந்துள்ள போதிலும் இவ்வாண்டு இதுவரை இரண்டு தடவைகள் போதைப்பொருள்கள் பிடிபட்டிருப்பதாகவும், கடந்த ஆண்டு போதைப்பொருள் சம்பந்தமான 35 வழக்குகளை தாம் கையாண்டதாகவும் வவுனியா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.விஜயநாயக்க தெரிவித்தார்.

போதைப்பொருளினை ஒழிப்பதற்காக விஷேட குழு ஒன்றும் பொலீஸாரால் அமைக்கப்பட்டுள்ளது. மன்னாரிலிருந்து வவுனியாவுக்கு வரும் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் சோதனைகளும் நடத்தப்படுகின்றன.

தென்னிந்தியாவிலிருந்து மன்னார் ஊடாகவே அதிகளவான போதைப் பொருள்கள் கடத்தப்படுவதாகவும் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் போதைப் பொருள் பாவனைக்குள்ளாகிய பலர் புனர்வாழ்வு அளிப்பதற்காக அனுப்பப்பட்டு இருப்பதாகவும, விஜயநாயக்க மேலும் தெரிவித்தார். (ம)

## அனுமதியின்றி மணல் ஏற்றியோருக்கு அபராதம்!

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த லொறி, பொலீஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டது.

மணல் ஏற்றிவந்த லொறியின் சாரதியும் உதவியாளரும் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர்செய்யப்பட்டனர்.

இந்த இருவருக்கும் தலா ஆயிரத்து 500ரூபா அபராதம் விதித்து மணலை மீசாலை காட்டுவளவு கந்தசுவாமி கோயிலுக்கு வழங்குமாறு நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

(ம-117)

## வேலிகளின் கதியால்கள் படையினரால் அகற்றப்படுகின்றன

தென்மராட்சி,மார்ச்18

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ பகுதியில் உள்ள வேலிகளின் கதியால்கள் படையினரால் அகற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அகற்றப்படும் கதியால்கள் நுணாவிலிருந்து மறவன்புலோ வரை அமைக்கப்பட்டுள்ள நான்கு மைல் நீளமான மண் அணைக்கு வெளியே போடப்பட்டு வேலி அமைக்கப்பட்டு வருவதாக அங்கு சென்று திரும்பிய மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மறவன்புலோப் பகுதியில் கடந்த மாதம் மூன்றாம் திகதி மக்களைப் பார்வையிட அனுமதித்த 32 வீடுகளிலும் படையினர் மீண்டும் நிலைகொண்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

மீளக்குடியமர அனுமதித்தும் மக்கள் இன்னமும் குடியேறாததால் அவற்றினைத்தாம் பொறுப்பேற்றதாகப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம-8-117)

# வலுவிழந்தோர் விவரம் திரட்டும் திட்டம் தொடர்பாக இணையம் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்18

வலுவிழந்தோர் விவரம் திரட்டும் வேலைத்திட்டம் ஒன்றின் போக்குக் குறித்து யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் வெளியிட்ட அறிக்கை இங்கு முழுமையாகத் தரப்படுகின்றது:

போரின் விளைவாக யாழ்.மாவட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்டோரில் வலுவிழந்தோரும் (உடல், உள, மூளை) அடங்குவர். அவர்களைப் பற்றிய முழுமையான விவரங்கள் மாவட்டத்தில் இல்லை. அதனால் அவர்களைப் பற்றி ஒரு கணிப்பீடு மேற்கொள்ளப்படவேண்டும் என்று தொண்டர் நிறுவனங்கள் மிக ஆவலாக இருந்தன.

இந்த விடயம் பற்றி ஒகஸ்ட் 2003 இல், 'சிறுவர் பாதுகாப்பு நிதியம்' என்ற அரச சார்பற்ற நிறுவனத்துடன் ஆரம்பக் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. ஒக்ரோபர் 2003இல் இடம்பெற்ற இறுதிக் கலந்துரையாடலில் விவரங்களைத் திரட்டுவதற்குரிய படிவம் வடிவமைக்கவேண்டும் என அரச சார்பற்ற நிறுவனங்களின இணையம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்த விடயத்தோடு தொடர்புடைய பலருடனும் இணையப் பிரதிநிதிகள் கலந்துரையாடி ஒரு படிவத்தைத் தயாரித்து நவம்பர் 2003இல் சமர்ப்பித்தனர். படிவம் அங்கீகரிக்கப்பட்டு தேவைக் கணிப்பீட்டை மேற்கொள்ளும்படி இணையம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதற்குரிய உத்தேச செலவு மதிப்பீட்டு அறிக்கையை இணையம் சமர்ப்பித்தது. அதில் மாவட்டத்திலுள்ள அனைத்து வலுவிழந்தோரையும் உள்ளடக்க உத்தேசித்திருந்தது. இது முன்பு நடந்த கலந்துரையாடல்களில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால், திடீரென வேலை தொடர்பான ஒப்பந்தம் சிறுவர்களுக்கென மட்டுப்படுத்தப்பட்டது. இதை மாற்றி, முன்னைய தீர்மானத்தை அமுல் செய்யும்படி இணையம் அழுத்தம் கொடுத்தது. இதனால், வேலை ஒப்பந்தம் ரத்துச்செய்யப்பட்டு, உள்நோக்கத்துடன் - வேலையை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், மாவட்டத்தின் பிரச்சினைகளின் முழுப் பரிமாணங்களும் வெளிவருவதற்கு வாய்ப்பில்லை என்பதால் கவலையடைகின்றோம். - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளோம். (ம)

# முல்லைத்தீவு மக்களுக்கு கடற்புலிகள் அரசியல் நிலைப்பாடுகள் பற்றி விளக்கம்

சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்து முல்லைத்தீவு மக்களுக்கு கடற்புலிகளின் அரசியல் துறையினரால் விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய தேர்தல் தொடர்பாகவும் புலிகளின் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பாகவும் விளக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடற் புலிகளின் அரசியல் துறையினரும், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் இந்த விளக்கக்கூட்டங்களில் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கிவருகின்றனர்.

இதேவேளை -

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் இம்முறை வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதால் இவ்வாறான பிரசாரம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

# உயர் நீதிமன்றத்தை அவமதித்தார்; எஸ்.பி.திசநாயக்கவுக்கு எதிராக வழக்கு

## தாக்கல் செய்ய நீதியரசர் பணிப்பு

கொழும்பு,மார்ச்18

உயர்நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்காவுக்கு எதிராக வழக்குத் தொடருமாறு நீதியரசர் சரத் என் சில்வா சட்டமா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க, ஹபாரதுவ பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் உயர்நீதிமன்றை அவமதிக்கும் வகையில் பேசினார் என காலி, உனவட்டுன பகுதியைச் சேர்ந்த மூன்று பேர் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

எஸ்.பி.திசநாயக்க உரைவிவரம் பதிவு செய்யப்பட்ட ஒளி நாடா இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்டு பின்னர் எட்டு உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட குழுவினர் அதை பார்வையிட்டனர்.

இதனையடுத்தே நீதியரசர் சரத் என். சில்வா இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

(ம-2)

# அச்சுவேலி வங்கிக் கிளையில் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு

அச்சுவேலி,மார்ச்18ள

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெறவிரும்பும் ஓய்வூதியர்களை வங்கிக் கணக்கு இலக்கத்துடன் வலி.கிழக்குப் பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் இலங்கை வங்கிக் கிளை செயற்பட ஆரம்பித்து ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை ஓய்வூதியம் பெறுவதற்கு வசதி செய்யப்படவில்லை என ஓய்வூதியர்களால் முறைப்பாடு செய்யப்பட்டு ஏந்தது.

இதுபற்றி வலி.கிழக்குப் பிரதேச சபையின் உதவிச் செயலாளர் க. இராசதுரை கருத்துத் தெரிவிக்கையில் -

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளை ஊடாக ஓய்வூதியம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெற விரும்புவோர் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கணக்கு இலக்கத்துடன் தமது விருப்பத்தை பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத்தர வேண்டும் - என்றார்.(ஐ-11)

# யாழ். மத்திய கல்லூரி



**ஆர்.மதுஷன்**
**(அணித் தலைவர்)**

நட்சத்திர வீரரான இவர், மத்திய வரிசை வலது கை அதிர டித் துடுப்பாட்ட வீரர். வலதுகை சுழற் பந்துவீச்சாளர். களத்தடுப் பில் பந்தினை சேகரிப்பதில் வல்லவர். 6 வருடங்களாகத் தொடர்ந்து விளையாடிவருகிறார்.

# 10
# வடக்கின் மா




**கே.ரொஹான்**
**(உபதலைவர்)**

நட்சத்திர வீரரும் சகல துறை ஆட் டக்காரரும், வலது கை ஆரம்ப துடுப்பாட்ட வீரர். வலது மிதவேகப் பந்து வீச்சாளர். 19 வயதுக்குட்பட்ட யாழ். மாவட்ட அணியில் இடம்பெற் றுள்ளதுடன், வடக்கு - கிழக்கு அணியிலும் இடம்பெற்றுள்ளார். இவர் அணிக்காக 5 வருடங்களாக விளையாடி வருகின்றார்.



**கே.கலிஸ்ரன்**

மத்தியவரிசை இடதுகைத்துடுப் பாட்ட வீரர். இடதுகை மிதவேகப்பந்து வீச்சாளர். இவர் ஒரு சிறந்த களத் தடுப்பாளரும் கூட. 2 வருடங்களாக அணியில் இடம்பெற்றுள்ளார்.



**எம்.யசோதரன்**

சிறந்த களத்தடுப்பாளர். இடது கை ஆரம்பப் பந்து வீச்சாளர். வலதுகை பின்வரிசை ஆட்டக்காரர். அணி இக் கட்டான நிலைக்குத் தள்ளப்படும் போது நிதானமாகத் துடுப்பெடுத் தாடியவர். அணியில் இரண்டு வருட மாக விளையாடிவருகிறார்.



**வி.கீதாமிர்தன்**

அறிமுக வீரரான இவர், விக்கெட் காப்பாளர் பணியில் வல்லவர். வலது கைத்துடுப்பாட்ட வீரர்.



**வி.ரஜீவ்குமார்**

நட்சத்திர வீரரான இவர், கடந்த வருடம் இவ்வணியின் தலைவராக செயற்பட்டு அணி, கிண்ணத்தைக் கைப்பற்றக் காரணமாக இருந்தவர். இடதுகை ஆரம்பப் பந்து வீச்சாளர். மத்திய வரிசை இடதுகைத் துடுப் பாட்ட வீரரான இவர் 6 வருடங்களாக விளையாடுகின்றார். யாழ். மாவட்ட அணியிலும் இடம்பெற்று விளையா டியவர்.



**எஸ்.தினேஸ்**

வலதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான இவர், ஒரு வலதுகைச் சுழற பந்து வீச்சாளரும் சிறந்த களத்தடுப் பாளரும்கூட. இவர் 3 வருடமாக அணி யில் இடம்பிடித்துள்ளார்.



**எவ்.எக்ஸ்.மயூரன்**

அறிமுக வீரரான இவர், வலது கை மிதவேகப் பந்து வீச்சாளர். வலது கைத்துடுப்பாட்ட வீரர். சிறந்த களத் தடுப்பாளரும் ஆவார்.



**எஸ்.சுரேஸ்ராஜா**

ஓட்டங்களை வேகமாகக் குவிப்பதில் வல்லவர். மத்திய வரிசை வலது கைத் துடுப்பாட்ட வீரர். வலதுகைச் சுழற்பந்து வீச்சாளரும் ஆவர். இரு வருடமாக அணியில் விளையாடி வரும் இவர் சிறந்த விக்கெட் காப் பாளருமாவார்.



**வி.கபில்தேவ்**

வலதுகை துடுப்பாட்ட வீரர். வலது கை மிதவேகப் பந்துவீச்சாளர். சிறந்த களத்தடுப்பாளர். 3 வருடங்களாக விளையாடுகிறார்.



**என்.துஷ்யந்தன்**

இரண்டு வருடங்களாக அணியில் விளையாடி வரும் இவர், சிறந்த வலது கைத் தடுப்பாளரும் வலது கைச் சுழற பந்து வீச்சாளரும் ஆவார்.



**ஏ.ஜசிந்தன்**

சிறந்த முறையில் சுழல் பந்து வீச்சை மேற்கொள்ளும் இவர் 19 வயதுக்குட்பட்ட யாழ். மாவட்ட அணியிலும் விளையாடியவர். சிறந்த களத்தடுப்பாளர். இவர் மூன்று வரு டங்களாக அணியில் விளையாடி வரு கிறார்.



**பி.ஜோன் பிறைனர்**

அறிமுகவீரரான இவர் ஒரு வலது சுழற் பந்து வீச்சாளரும் மத்திய வரி சைத் துடுப்பாட்ட வீரருமாவார்.



**ஆர்.சியாம்ராஜ்**

அறிமுக வீரரான இவர் ஒரு வலது கை வேகப்பந்து வீச்சாளர். மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரராக கள மிறங்கி அணிக்காக ஓட்டங்களைக் குவிப்பதில் வல்லவர். சிறந்த சகல துறை ஆட்டக்காரரும் கூட.



**எஸ்.சத்தியன்**

வலதுகை மிதவேகப் பந்து வீச்சா ளரான இவர் புதிதாக அணியில் இடம்பெற்றுள்ளார். மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரரும் சிறந்த களத்தடுப் பாளரும் ஆவார்.

## சிறந்த பயிற்சியாளர்



சர்வதேசத்தர
மாணவர்களுக்குக்
- இவ்வாறு தெ
அதிபர் ரி.தனபா
நூற்றாண்டு வி
கிரிக்கெட் போட்டி
போதே இதனை
அவர் மேலும்
'வடக்கின் பெ
யிருப்பது பெரும்
பாடசாலைகளின்
சாத்தியமாக்கியு

வளர்ச்சி அடைய வேண்டும். 1904ஆம் ஆண்டு எமது கல்
வணக்கத்திற்குரிய ஜேக்கப் தொம்ஸன் அடிகளார் ஆரம்
கிரிக்கெட் தொடர் மேலும் பல நூற்றாண்டுகளைக் க

எமது மண்ணில் கிரிக்கெட் விளையாட்டு மேலும் வள
ளர்களின் சேவை அவசியத் தேவையாகும்.

30 ஆண்டுகளின் முன்னர் தேசிய மட்ட கிரிக்கெட் அ
பெற்றுப் பிரகாசித்துள்ளனர். ஆனால், இந்த நிலை இப்பே
முன்னைய சிறப்பை மீண்டும் நாம் அடைய சிறந்த

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இதற்கு உ
டக் கிரிக்கெட் சங்கம் இதனைப் பயன்படுத்தி சிறந்த கிரிக்
இந்த மண்ணுக்குப் பெற்றுத்தர வேண்டும்.

இன்று ஆரம்பமாகும் 'வடக்கின் பெரும் மோதல்' கிரிக்
களின் வீரர்களும் சிறப்பாக விளையாட ஒத்துழைப்பு
ரசிகர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மைதானத்துக்கு
யூறு ஏற்படுத்தாது அவர்கள் ஆதரவு வழங்கவேண்டும் - எ

## புற்றரை ஆடுகளம்



வடக்கில் கிரிக்
களமே உடனடித்
- இவ்வாறு
அதிபர் க.இராச
நூற்றாண்டுவிழ
கிரிக்கெட் போட்டி
தியாளர் கேட்ட
அவர் மேலும்
வடக்கில் முத
லைக் கிரிக்கெட்
ஆரம்பிக்கப்பட்ட
ஜோன்ஸ் கல்லூ

போட்டி 1904ஆம் ஆண்டு முதன்முதலில் நடத்தப்பட்ட
அதிபராக இருந்தவரான வணக்கத்துக்குரிய வெப்சர்
கிரிக்கெட் போட்டிக்கு கால்கோளிட்டார். அன்றுமுதல்
நட்புறவால் கிரிக்கெட் விளையாட்டின் புனிதம் கட்டிக
பெரும் மோதல்' நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுக
பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது.

இந்தச் சமயத்தில் வடக்கில் கிரிக்கெட் மேலும் அபிவ
தேசத் தரத்தை அடையவும் புற்றரை ஆடுகளம் இங்
குறைந்தது 3 பாடசாலைகளிலாவது புற்றரை ஆடுகள
வகையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில், பி
லைகளின் விளையாட்டுச்சங்கத்தின் உதவியுடன் புற்
இன்று ஆரம்பமாகும் 'வடக்கின் பெரும் மோதல்' கிரி
வழங்குவதைப் போன்று - இம்முறையும் ஆதரவையு
மானிகள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொ


**இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி**
மொபிரெல் — **விசேட கழிவில் விற்பனைக்கு** — பவர் செலுலர்

24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.

உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது.

உத்தரவாதமும் உண்டு.



எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மேலதிக விவரங்களுக்கு:

**HAND PHONE UNLOCK** செய்து தரப்படும்.

**HAND PHONE** பழுதுபார்க்கப்படும்.

பவர் செலுலர் T.P. 0712 399220 / 021 222 7070 / 0777 242416

**நியூ லலிதா முதலாம் மாடி**

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (ராஜா தியேட்டர் அருகில்).

(C/33658)(30-13-17)

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**

இலங்கையில் தமிழ்மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச் சஞ்சிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி முதலாவது கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - (2) 2004**

**எமது அனைத்துக் கணனி கற்கை நெறிகளுக்கும்**

**80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்**

20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

Maniam's Building
இல. 152/1, சிராம்பையடி வீதி, யாழ்ப்பாணம்.
(Off Stanly Rd. 0777 222422/0777 278880

# 00
# பெரும் போர்

# சென். ஜோன்ஸ் கல்லூரி

## சியாளர்கள் தேவை!

சர்வதேசத்தரத்திலான கிரிக்கெட் பயிற்சி எமது மாணவர்களுக்குக் கிடைக்க வழியேற்படுத்த வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ரி.தனபாலன்.

நூற்றாண்டு விழாக்காணும் வடக்கின் பெரும் மோதல் கிரிக்கெட் போட்டி குறித்து அவர் கருத்து வெளியிட்ட போதே இதனை அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'வடக்கின் பெரும் மோதல்' நூற்றாண்டுகளை எட்டியிருப்பது பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது. இரு பாடசாலைகளின் இடையேயான நட்புறவே இதனைச் சாத்தியமாக்கியுள்ளது. இது தொடர்ந்து மேலும்
ஆண்டு எமது கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய
ன் அடிகளார் ஆரம்பித்து வைத்த இந்தப் பாரம்பரியக்
ற்றாண்டுகளைக் கண்டு சிறக்கவேண்டும்.
யாட்டு மேலும் வளர சர்வதேசத்தரத்திலான பயிற்சியா
யாகும்.
மட்ட கிரிக்கெட் அணிகளில் யாழ். வீரர்கள் பலா இடம்
இந்த நிலை இப்போது வீழ்ச்சியடைந்துள்ளது. ஆகவே,
அடைய சிறந்த பயிற்சியாளர்கள் அவசியம்.
ச் சபை இதற்கு உதவ முன்வந்துள்ளது. யாழ். மாவட்
படுத்தி சிறந்த கிரிக்கெட் பயிற்சியாளர்களின் சேவையை
ண்டும்.
ரும் மோதல்' கிரிக்கெட் ஆட்டத்தின் போது, இரு அணி
பாட ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கிரிக்கெட்
மைதானத்துக்குள் பிரவேசித்து, ஆட்டத்துக்கு இடை
ழங்கவேண்டும் - என்றார் அவர்.

## டுகளம் அவசியம்!

வடக்கில் கிரிக்கெட் அபிவிருத்திக்கு புற்றரை ஆடுகளமே உடனடித்தேவையாக உள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை.

நூற்றாண்டுவிழாக் காணும் 'வடக்கின் பெரும் மோதல்' கிரிக்கெட் போட்டியையொட்டி அவரிடம் 'உதயன்' செய்தியாளர் கேட்டபோது இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் முதன்முதலாக 1901ஆம் ஆண்டு பாடசாலைக் கிரிக்கெட் அணி யாழ். மத்திய கல்லூரியிலேயே ஆரம்பிக்கப்பட்டது. யாழ் மத்திய கல்லூரிக்கும், சென்
ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயான கிரிக்கெட்
யில் நடத்தப்பட்டது. அப்போது யாழ். மத்திய கல்லூரி
க்குரிய வெப்சர் அடிகளார் 'வடக்கின் பெரும் மோதல்'
ர். அன்றுமுதல் இரு பாடசாலைகளிடையே தொடரும
ன் புனிதம் கட்டிக் காப்பாற்றப்பட்டு இன்று 'வடக்கின்
வக் கொண்டாடுகிறது. இது இரு பாடசாலைகளுக்கும்
து.
கட் மேலும் அபிவிருத்தியடையவும், எமது வீரர்கள் சர்வ
ஆடுகளம் இங்கு அவசியம் அமைக்கப்படவேண்டும்.
புற்றரை ஆடுகளங்கள் அமைக்கப்படவேண்டும். இந்த
மைதானத்தில், பிரிட்டனில் செயற்படும் தமிழ்ப் பாடசா
உதவியுடன் புற்றரை ஆடுகளம் அமைக்கப்படவுள்ளது.
ரும் மோதல்' கிரிக்கெட் ஆட்டத்துக்கு ஆண்டுதோறும
யும் ஆதரவையும், ஒத்துழைப்பையும் கிரிக்கெட் அபி
கேட்டுக் கொள்கின்றேன் - என்றார் அவர்.



**ரி.சி.அன்றூ**
(அணித்தலைவர்)
நட்சத்திர வீரரான இவர் மத்தியவரிசை வலதுகைத் துடுப்பாட்ட வீரர். எதிரணியினரால் வீசப்படும் பந்துகளை நாலாபுறமும் பலமாக சிதறடிப்பதில் வல்லவர். மிதவேக பந்து வீச்சில் புலியாகத் திகழும் இவர் பந்துகளைத் தடுத்து எதிரணியின் ஓட்டங்களைக கட்டுப்படுத்துவதிலும் வல்லவர். 4 வருடங்களாக அணியில் இடம பெற்றுள்ளார். கடந்தவருடம் யாழ். மாவட்ட 19 வயதிற்குட்பட்ட அணியில் இடம் பெற்று விளையாடியுள்ளார்.



**சி.எம்.டினேஷ்**
(அணி உபதலைவர்)
நட்சத்திர துடுப்பாட்ட வீரர். ஒரு சிறந்த விக்கெட் காப்பாளர். இவர் அணிக்காக 3 வருடங்கள் தொடர்ச்சியாக விளையாடி வருவதுடன் 19வயதுக்குட்பட்டோருக்கான யாழ். மாவட்ட அணியிலும் விளையாடி வருகிறார்.



**பி.சகிந்தன்**
மத்திய வரிசை துடுப்பாட்ட வரரான இவர், தேவை ஏற்படின் விக்கெட் காப்பாளராகவும் செயற்படுவார். அணியில இரு வருடங்களாக விளையாடி வருகின்றார்.



**ஏ.அன்புஜன்**
மூன்று வருடங்களாக அணியில் விளையாடிவரும் இவர் வலதுகை அதிரடித்துடுப்பாட்ட வீரர். சிறந்த களத்தடுப்பாளரும் ஆவார். நிலைமைக்கேறப தனது சுழற்பந்து வீச்சின் மூலம் அணிக்கு கைகொடுக்க வல்லவர்.



**என்.நவகீதன்**
மத்திய வரிசை இடது கைத்துடுபபாட்ட வீரரும், இடது மெது வேகப்பந்து வீச்சாளருமான இவர் ஒரு சிறந்த களத்தடுப்பாளர்.



**வை.தனுஜன்**
அறிமுக வீரரான இவர் பின்வரிசை வலது கை துடுப்பாட்ட வீரர். மிகச் சிறந்த களத்தடுப்பாளரும் கூட. மித வேகப்பந்து வீச்சாளருமாவார்.



**எஸ்.கிருஷ்ணகுமார்**
வலதுகை அதிரடித்துடுப்பாட்ட வீரரான இவர், வலது கைச்சுழற்பந்து வீச்சாளர். சிறந்த களத்தடுப்பாளர். மற்றும் சிறந்த சகலதுறை ஆட்டக்காரரும் கூட. இவர் அணிக்காக 4 வருடங்களாக விளையாடி வருகிறார்.



**எம்.மயூரன்**
இரண்டு வருடமாக அணியில் விளையாடிவரும் இவர். வலது கை மித வேகப்பந்து வீச்சாளர். அத்துடன் வலதுகை பின்வரிசைத்துடுப்பாட்ட வீரரும் கூட. அணி நெருக்கடிக்குள்ளாகின்ற போது தனது சமயோசித துடுபபாட்டத்தின் மூலம் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடியவர். அதே வேளை களத்தடுப்பு மற்றும் பந்து வீசு என்பவற்றின் மூலம் எதிரணியின் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தக் கூடியவர்.



**ஏ.சஞ்ஜெயன்**
மத்திய வரிசை வலது கைத்துடுப்பாட்ட வீரரான இவர் வலதுகை மித வேகப்பந்து வீச்சாளரும் கூட. இவர் அணியில் இரண்டு வருடமாக விளையாடிவருகிறார்.



**ரீ.நிருபன்**
அறிமுக வீரரான இவர், ஆரம்ப துடுப்பாட்ட வீரர். வலது கை மிதவேகப்பந்து வீச்சாளரும் ஆவார்.



**ரீ.மதன்ராஜ்**
வலதுகைத் துடுப்பாட்ட வீரரான இவர் பந்துகளை துவம்சம் செய்வதில் வல்லவர். இவர் துடுப்பாட்டத்திற்காக களத்தில் நிற்கும் வரை எதிரணி வீரருக்குக் கலக்கம் தான். அதுமட்டுமல்ல இடது கை மிதவேகப்பந்து வீச்சிலும் வல்லவர். இவர் சிறந்த களத்தடுப்பாளர். சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்.



**ஏ.மயூரதன்**
அறிமுக வீரரான இவர் வலதுகை ஆரம்பத்துடுப்பாட்ட வீரரும், வலது கைச் சுழற்பந்து வீச்சாளரும், சிறந்த களத்தடுப்பாளருமாவார்.



**எஸ்.சுதன்**
வலதுகைச் சுழற்பந்து வீச்சாளரான இவர் எதிரணியின் விக்கெட்டுக்களைக கொய்வதில் வல்லவர். வலதுகை பின வரிசைத் துடுப்பாட்ட வீரர். சிறந்த களத்தடுப்பாளர். இவர் இரு வருடமாக அணியில் இடம்பெற்று வருகிறார்.



**பி.கஜரூபன்**
வலது கைத்துடுப்பாட்ட வீரரான இவர் அணிக்கு புதுமுகம். சிறந்த இடது கைசுழற்பந்து வீச்சாளரும், சிறந்த களத்தடுப்பாளரும் ஆவார்.



**ஏ.கிரிஷன்**
அறிமுக வீரரான இவர் ஒரு வலதுகை அதிரடித் துடுப்பாட்ட வீரராவார். வலதுகை மித வேகப் பந்து வீச்சாளரும், சிறந்த களத்தடுப்பாளரும் கூட.


6
gy
ாது.



HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

2 Year warranty



RG
இரத்தினகோபால்ஸ்
65,63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 0777 -340056, 021 222 6185

# G.A.Q. (பேராதனை, யாழ்ப்பாணம்)

இவற்றிற்குரிய விரிவுரைகள் (புதிய பிரிவு) ஆரம்பமாகியுள்ளன

★ குறிப்பு:

பேராதனை பல்கலைக்கழகத்திற்குரிய பல்கலைக்கழக விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்குரிய விண்ணப்ப முடிவு திகதி: 31-03-2004

B.A.Part I பரீட்சைக்குரிய மீட்டல் விரிவுரைகள் ஆரம்பம்: 20-03-2004. இவ்விரிவுரைகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

S.அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி,

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(29728) (26-12-34)






முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

License No : 50445

BS No : 5412:1996
License No : KM41240

Access Graphics

WATERTEC

Simply Better

முத்திரையை அவதானியுங்கள்

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# நான்காம் ஆண்டு
# நெஞ்சம் கனக்கும் நினைவலைகள்!

மலர்வு 01 - 06 - 1959



உதிர்வு 02 - 04 - 2000

**திருமதி சத்தியகலா தெய்வேந்திரன் (கலா)**

திதி:18.03.2004

காலங்கள் கரைந்தாலும்
உங்கள் நினைவுகள் மறைவதில்லை!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
சகோதரர்கள் (பிரான்ஸ்),
அற்புதஜெயம் G.S.
குடும்பத்தினர்.

இல.64, செம்மணி றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (29736)(14-16)

# 4ஆம் வருட அஞ்சலி

தோற்றம் 16 - 05 - 1921



மறைவு 01 - 04 - 2000

**அமரர் சின்னத்தம்பி பொன்னையா**

திதி:18.03.2004 துவாதசி

ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறவில்லை எம் இதயம்!
ஈண்டும்மை நினைந்தே நாமிங்கு வாழ்கின்றோம்.

இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையாரின் 4ஆம் வருட நினைவு அஞ்சலி நிகழ்வு இன்று (18.03.2004) வியாழக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

- அன்பு மகன் - பொ.பரமசாமி
குடும்பத்தினர்.

புலோப்பளை,
பளை. (29351)(38-12-34-26)

## சமுர்த்தி நிவாரண முத்திரைக்கான பதிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்18

நவாலி வடக்கில் சமுர்த்தி நிவாரண முத்திரையைப் பெறுவதற்கு இது வரையில் பதிவுகளை மேற்கொள்ளாத பயனாளிகளுக்கான பதிவுகள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளதாக நவாலி வடக்கு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் எஸ்.சதீஸ் அறிவித்துள்ளார்.

எனவே இதுவரையில் பதிவுகளை மேற்கொள்ளாத பயனாளிகளை சமுர்த்தி வங்கிப் புத்தகம், குடும்பப் பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் காலை 8 மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்கும் இடையில் நவாலி வடக்கு, புலவர் வீதியில் உள்ள அலுவலகத்திற்கு சமுகம் அளித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

## கண்ணிவெடி அகற்றும் பணியில் ஜப்பான் நிறுவனம்

வவுனியா,மார்ச்18

வவுனியா மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஜப்பானிய நிறுவனம் ஒன்று புதிதாக இணைந்துள்ளது.

மேற்படி நிறுவனத்தினால் கண்ணிவெடி அகற்றும் பயிற்சி வழங்கப்பட்ட 36 பேர் கடந்தவாரம் பயிற்சிகளை முடித்து வெளியேறினர்.

இந்தக் குழுவினர் விரைவில் தமது பணிகளை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## மாதர் சங்கங்களின் ஆண்டுவிழா

சாவகச்சேரி,மார்ச்18

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் வடக்கு சந்திரபுரம் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள அன்னை திரேசா, சூரியா மாதர் சங்கங்களின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு சங்கத் தலைவி திருமதி மனோரஞ்சிதமலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார். (ஒ-31)

## இலவசக் கணனிப் பயிற்சி

காரைநகர்,மார்ச்18

கனடா - காரைநகர் கலாசார மன்றத்தின் அனுசரணையுடன் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இலவச கணனிப் பயிற்சி வகுப்பு கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளும் உத்தியோகத்தர்களும் இந்தப் பயிற்சிநெறியில் பங்குபற்றி வருகின்றனர்.(ஒ-73)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-22

யாழ்.மாவட்ட
ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(12-34-26) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)


# அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

சிறி கிருஷ்ணா வெல்டிங் வேக்ஸ் உரிமையாளர்

**மாணிக்கவாசகர் (ராசாத்தி)** அவர்களின்

அன்பு மனைவி இல்லத்தரசி

**திருமதி நாகரத்தினம் மாணிக்கவாசகர்**

அவர்கள் காலமானதையிட்டு இன்று (18-03-2004) வியாழக்கிழமை அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் நாளை (19-03-2004) வெள்ளிக்கிழமை ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மாணிக்கவாசகர்
(ராசாத்தி).

மாதனை,
பருத்தித்துறை. (29731) (14)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 04 - 1941



உதிர்வு 18 - 03 - 2003

**அமரர் செல்லப்பா தங்கராசா**

(இளைப்பாறிய அதிபர்)

திதி: அபரபக்கப் பிரதமை 06.04.2004

மரணம் சர்வ நிச்சயம்- தெரிந்தும்
மனதில் துயர் நித்தியம்.

- குடும்பத்தினர்.

தும்பளை,
பருத்தித்துறை. (29652)(38-12-34-26)


உங்கள் இசை ஆவல்களைப் பூர்த்திசெய்ய எம்மிடம்

★ உலகநாடுகளின் டிஸ்கவர் CD'S

★ குழந்தைகளுக்கான நேசரீஸ் CD'S

மற்றும் CD கவர், BLANK CD போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்:

புதிய பழைய VIDEO CD'S

புதிய, பழைய, இடைக்கால AUDIO CD'S

அனைத்து வகையான MP3 CD'S

தமிழ், ஆங்கில DVD

கர்நாடக சங்கீத CD'S

இந்து, கிறிஸ்தவ பக்திபாடல் CD'S

SOFT WARE, GAMES CD'S

CD க்களின் சங்கமம்

Music World

பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். ☎: 021 222 6554

புலிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிளவு தொடர்பாக

# ஊடகங்கள் வெளியிடும் உறுதியற்ற தகவல்கள் அவற்றின் மீதுள்ள நம்பிக்கையைப் பாதிக்கும்

## கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவிக்கிறார்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் புலிகளின் கிழக்கு மாகாண முன்னாள் தளபதி கருணாவுக்கும் இடையில் உருவாகியுள்ள உட்பூசல் தொடர்பான உறுதி செய்யப்படாத தகவல்களை இலங்கையின் ஒரு சில ஊடகங்கள் வெளியீடுவதால் அவற்றின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை பாதிப்படையும் என இராணுவத்தின் கிழக்கு மாகாணக் கட்டளைத தளபதி ஜெனரல் என்.மல்லவராச்சி கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் மத்தியில் உருவாகியுள்ள உட்பூசல தொடர்பான நிலைமையைப் படையினர் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் ஒரு சில ஊடகங்கள் வெளியிடும் தகவலைப் போன்று பாரதூரமான சம்பவங்கள் எதுவும் அப்பகுதியில் நடைபெற்றதாகப் படையினருக்குத் தகவல் கிடைக்கவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவது சிரமமான நிலையில் உள்ளபோதிலும் சில ஊடகங்கள் அப்பிரதேசங்களில் நடைபெற்றதாகச் சில சம்பவங்களைக் குறிப்பிட்டுத் தகவல்களை வெளியிடுவது நகைப்புக்கிடமாக உள்ளது எனவும் மல்லவராச்சி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கிழக்கு மக்களின பாதுகாப்பு நிலைப்பாடுகள் தொடர்பாகப் படையினர் மிகவும் அவதானமாகச் செயற்படுவதாகவும் சாதாரண மக்களுக்குச் சிரமங்கள் ஏற்படும் வகையிலான எத்தகைய செயற்பாடுகளுக்கும் தாம் இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-8)



யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கிக்கான கட்டடம் யாழ்.பிரதேச செயலக வளாகத்தில் கட்டப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம்பெற்றது.

இதில் யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம். சமுர்த்தி வங்கிக்கிளை முகாமையாளர் பி.கியூமன் மற்றும் பிரதேசச் செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஒ-30)

ரூபவாஹினியில் தேர்தல் பிரசாரம்:

# ஹரீம் பீரிஸிற்கு யு.என்.பி. செயலாளர் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்18

தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள வழிகாட்டல் நெறிகளுக்கு மாறாகக் குறுந்தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இலவசமாக ஒளிபரப்பப்படுவதற்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் ஹரீம் பீரிஸ் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்றும் அவைகளுக்கான கட்டணங்களைச் செலுத்த வேண்டியிருக்குமென்றும் ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

'இதற்கு யார் பொறுப்பு', 'இதற்காகவா நாம் போராடினோம்' என்ற தலைப்புக்களில் குறுந் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கட்டணமின்றி ஊடகங்களில் காட்டப்படுவதாகவும், இவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான பிரசாரங்கள் என்றும் சுட்டிக்காட்டி ஐ.தே.கட்சி பொதுச் செயலாளர் கௌரத் கப்புகொட்டுவ, ரூபவாஹினித் தலைவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இவை ஊடகங்களை நீதியாகவும் பக்கச் சார்பின்றியும் பயன்படுத்தவேண்டுமெனத் தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள வழிகாட்டல்களுக்கு மாறான செயல்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# தேர்தல் ஆணையாளரதும் பொலிஸ் ஆணைக் குழுவினதும் அதிகாரங்களை ஜனாதிபதி உதாசீனம் செய்கிறார்

ஐரோப்பிய யூனியன் தலைவரிடம் ஹக்கீம் முறைப்பாடு

கொழும்பு,மார்ச்18

எந்தவிதமான காரணங்களும் இலலாது கல்முனைப் பொலீஸ் நிலையப பொறுப்பதிகாரியை அம்பாறைக்கு இடமாற்றம் செய்ய உள்நாட்டலுவலகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நடவடிக்கை தேர்தல் ஆணையாளரினதும் பொலீஸ ஆணைக்குழுவினதும் அதிகாரங்களை உதாசீனம் செய்யும் நடவடிக்கையாகுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஐரோப்பிய யூனியன் தலைவரைச் சந்தித்த போது தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண அரசியலில் முஸலிம் காங்கிரஸ்'க்குள்ள உரிமைகளைப பறிக்கும் நோக்குடனும் தமகுச் சார்பான பொலீஸ் அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்குடனும ஜனாதிபதி கல்முனைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியை அம்பாறைக்கு மாற்றியுள்ளதாக ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

கூட்டு முன்னணியில் உள்ள முஸலிம் உறுப்பினர்களைக் கொண்டு கிழக்கு மாகாண அரசியல் பலத்தை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற கொள்ளப்பட்டு வருவதாகவும் அது தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்கள் கூட பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (ம-8)

### - ஒரே நாளில் ரூபா 30 லட்சம் வங்கியில் வைப்பு

தென்மராட்சி,மார்ச்18

சாவகச்சேரி மக்கள் வங்கியினால் கொடிகாமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் சேவை அலுவலகத்தில் முதல்நாள் வைப்புத் தொகையாக 30 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

### நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டது

மண்டைதீவு,மார்ச்18

காரைநகர் ஊரிப் பாடசாலையின் அதிபர் பதவிக்காக நேற்று புதன்கிழமை நடத்தப்பட இருந்த நேர்முகப் பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-88)

### கைதடியில் புதிய காவலரண்

கைதடி,மார்ச்18

கைதடிச் சந்திப் பகுதியில் கடந்த சில தினங்களாக இராணுவத்தினரின் ரோந்து அதிகரித்திருப்பதோடு, புதிய காவலரண்களும் அமைக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

கைதடிச் சந்தியில் கண்டி வீதியையும் கோப்பாய் வீதியையும் இணைக்கு இடத்திலேயே புதிய காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் நடமாட்டம் இரவு பகலாகக் காணப்படுகின்றது. (ம-175)

### பாலர் விளையாட்டு விழா

கைதடி,மார்ச்18

கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்லச் சிறார்களின் வருடாந்த விளையாட்டுவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிககு பாலர் பகல் இல்லத் தலைவர் டாக்டர் திருமதி வா.தயாளன் தலைமையில் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற இருக்கின்றது.

பிரதம விருந்தினராக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம் பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார். (ம-75)

யாழ்.மாவட்டத்தில்

# பதில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு அதற்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை

வலி,வடக்கு, மார்ச்17

யாழ். மாவட்டத்தில் பதில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கான கொடுப்பனவு கடந்த வருடம் முதல் வழங்கப்படவில்லையெனத் தெரிவிககப்படுகிறது.

இலங்கையில் யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கிராம அலுவலர்களின் பதில் கடமை வேதனம் கடந்த ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கிராம அலுவலர்களின் தொழிற்சங்கங்கள் பதில் கடமை வேதனம் சம்பந்தமாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடன் தொடர்புகொண்டபோது உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்குக் கூட பதில் கடமைக்கான வேதனம் வழங்கப்படும்போது யாழ். குடாநாட்டு கிராம அலுவலர்களுக்கு இக்கொடுப்பனவு கிடைக்காமையை இட்டு அவர்கள் விசனமடைந்துள்ளனர். (ம-8-86)

### மஹர பிரதேச சபை கலைக்கப்பட்டது

கம்பஹா மாவட்டத்தில் உள்ள மஹர பிரதேச சபையை மேல் மாகாண சபை முதலமைச்சர் கலைத்துள்ளார் என அறிவிக்கப்பட்டது.

ஐ.தே.கவின் உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தப் பிரதேசசபை சரியாக இயங்கவில்லை என்பதே முதலமைச்சரின் குற்றச்சாட்டாகும்.

உரியமுறையில் செயற்பாடுகள் அமையாத காரணத்தால் தனக்கிருக்கும் அதிகாரத்துக்கமைய மஹர பிரதேச சபையின் செயற்பாடுகளை இடைநிறுத்தி அதன் தலைவரையும் அவர் நீக்கியுள்ளார்.

கடந்த சில மாதங்களாக முதலமைச்சர் ரெஜினோல்ட் குரேக்கு இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைததையடுத்து அது குறித்துப் பரிசிலித்து அவர் இந்த முடிவை எடுத்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# அரச வைத்தியர்களின் வேலைநிறுத்தத்தின் பின்னணியில் செயற்படுவது ஜே.வி.பியினரே!

## அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்18

அரச வைத்தியசாலை டாக்டர்களின் வேலை நிறுத்தத்தின் பின்னணியில் ஜே.வி.பியினரே செயற்படுகின்றனர்.

ஒரு காபந்து அரசால் புதிய நியமனங்களை வழங்கவோ அல்லது சம்பள உயர்வை வழங்கவோ முடியாது. இதனை விடயம் தெரிந்த டாக்டர்களே புரிந்துகொள்ளாமல் ஜே.வி.பியினரின் கைப்பொம்மைகளாகச் செயற்படுகின்றனர். இது தான் வேதனைக்குரியது என்று சாடுகின்றார் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன் ரயில்வே, போக்குவரத்து, மின்சாரசபை, அரச வைத்தியசாலைகள் எனப் பல துறைகளில் வேலை நிறுத்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்து அரசுக்குத் தொல்லை கொடுத்தவர்கள் ஜே.வி.பியினர்.

எனினும், நாம் வேலை நிறுத்தக்காரகளுடன் நேரடியாகப் பேசி நியாயமான தீர்வினைக் கண்டோம்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் தாங்கள் ஆட்சிக்கு வந்துவிடுவோம். அப்போது பிரச்சினைகளைத் தீர்ப்போம் எனக் கூறிக்கொண்டு போராட்டங்களையும், உண்ணாவிரதங்களையும் கைவிட்டனர்.

ஆனால், இப்பொழுது தேர்தலில் வெற்றி பெறமுடியாது என்ற நிலை ஏற்பட்டவுடன் மீண்டும் வேலை நிறுததங்களையும் உண்ணாவிரதப் போராட்டங்களையும் ஆரம்பித்துவிட்டனர்.

சாதாரண சிற்றூழியர்கள் விவரம் புரியாதவர்கள். அவர்கள் தொழிற்சங்கத்தினர் கூறுவதற்கு எல்லாம் தலையாட்டுபவர்கள்.

ஆனால், டாக்டர்கள் அப்படியல்லர்; படித்தவர்கள். அரசியல் விவகாரம் அறிந்தவர்கள். நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் காபந்து அரசு ஒன்றினால் எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்கமுடியாது. குறிப்பாகச் சம்பள உயர்வு, புதிய நியமனங்கள் என்பன தேர்தல் விதிகளுக்கு முரணானவை. இதனை டாக்டர்களும் நன்றாக அறிவார்கள்.

இப்படியான நிலையிலும்கூட அரசு இவர்களுடன் பேச்சு நடத்துகின்றது.

ஆனால், ஜே.வி.பி. ஆதரவாளர்கள் இதனை ஏற்கவில்லை. எண்பதுகளில் ஜே.வி.பியினரின் போராட்டத்தால் சகல வைத்தியசாலைகளும் மூடப்பட்டன. விபத்துச் சேவைப் பிரிவும் சவச்சாலைகளும் கூட மூடப்பட்டன.

இதனால், பல நூறு பிரேதங்கள் அழுகிச் சிதைந்து போயின. பல நூறு பேர் இறந்தனர். கர்ப்பிணித் தாய்மார் இறந்தனர். இப்படியான ஒரு யுகத்தை மீண்டும் ஏற்படுத்த முனைகின்றார்கள் ஜே.வி.பியினர்.

அரசியல் ஆதாயத்திற்காக ஜே.வி.பியினர் நடத்தும் இந்தப் போராட்டத்தில் டாக்டர்கள் பலிக்கடாக்களாகி விடக்கூடாது என்று அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன வேலை நிறுத்தம் செய்யும் டாக்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். (ம-க)

# சிறுவர் தொடர்பாடல் குழுக்கள் மூலம் மாணவர் ஆற்றல்கள் வெளிவரும்

## ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி அதிபர் கருத்து

ஊர்காவற்றுறை,மார்ச்18

மாணவர்களிடம் பொதிந்து கிடககும் ஆற்றலை வெளிக்கொண்டுவரும நோக்கிலேயே எமது கல்லூரியில் சிறுவர் தொடர்பாடல் குழுக்கள் அமைககப்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபர் வணபிதா எ.ஜே.யேசுதாசன்.

அண்மையில் இக்கல்லூரியில் சிறுவர் தொடர்பாடல் குழுவினால் நடத்தப்பட்ட இசைநிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மாணவரிடமும் ஒவ்வொரு தனிப்பட்ட திறமைகள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றைக் வெளிக்கொண்டுவருவதும் அதற்கான சரியாக களம் அமைத்துக் கொடுப்பதும் எமது கடமையாகும்

தீவகக் கல்வி வலயத்தில் முதன முதலாக எமது கல்லூரியிலேயே சிறுவர் தொடர்பாடல் குழுக்கள் அமைககப்பட்டுள்ளன. இந்தக் குழுமூலம் இசைத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை ஒருங்கிணைத்து இந்த இன்னிசை நிகழ்வை ஒழுங்குபடுத்தியுள்ளோம்.

மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் செலுத்தும் அக்கறையை கலை நிகழ்ச்சிகளை நடத்துவதிலும், அதில் பங்குபற்றுவதிலும் செலுத்த வேண்டும். அதன்மூலம் பாடசாலையில சகல துறைகளிலும் அவர்கள் முழுமை பெற்று விளங்கமுடியும் என்றார்.

கல்லூரியின் சிறுவர் தொடர்பாடல் குழுவின் தலைவர் கிரிசேந்திரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வணபிதா மைக்கல் சௌந்தரநாயகம் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார் (ம-8-16)

# தவக்காலச் சிந்தனை

## பிரிவினை ஒரு பேய்

தனக்கே எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப் போகும்

*(லூக். 11:17)*

இருபத்திமூன்றாம் நாள்

பிரிவினை மனிதனோடுகூடப் பிறந்த ஒரு பேய். சாதி, இனம், மதம், மொழி, பிரதேசம், ஆண், பெண் என்று மனிதன் பல்வேறு ரீதியாக கூறுபோடப்படுகின்றான். ஆட்சி அதிகாரத்தின் ஆசனங்களை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகப் பேயுடனும் கூட்டுச் சேரத் தயங்காது கூச்சமின்றிப் பேசுபவர்கள் அரசியல்வாதிகள். உறவில் சிலர் நச்சுப் பாம்புகள். இன்னும் சிலர் நரிகள். நாலு பேர் சேர்ந்து சந்தோசம் கொண்டாடும்பொழுது அவர்களைப் பிரிப்பது சிலருக்கு இன்பம். இயேசுவினுடைய பணிகளுள் பேய் ஓட்டும் பணி ஒரு முக்கியமானது ஆகும். தீமையின் பிடியிலிருந்து அசுத்த ஆவிகளின் வல்லமையிலிருந்து அடிமைப்படுத்தும் சக்திகளிலிருந்து மனிதனை விடுவித்து அவன் மாண்புள்ளவன் எனப் பறைசாற்றுகின்றார் இயேசுக் கிறிஸ்து. பண்புள்ளவன் உண்மை மனிதன். அவன் மனிதர்களை மதிப்பவன். சுதந்திரத்தைக் காப்பவன் தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.

- சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

விபுலானந்தர் வீதி, அரியாலையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.கதிரவேல், 23, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்.(29734)

3மாதம் நிரம்பிய மெல்லிய மண் ணிற 2 பொமேறியன்(ஆண்-1,பெண்-1) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 70/2, பழையபூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ். (29732)

அன்னசத்திர வீதியில் 1¼ பரப் புக் காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கலீனா, 111/A, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P. 077 - 6314196 (29762)

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970இல் பிறந்த, அவிட்ட நட்சத்திர லண்டனில் தொழில் உரிமைபெற்ற மணமகனுக்கு கனடா, ஐரோப்பிய நாடுகளில் PR உடைய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: திரு.வே.தர்மஞானசிங்கம், T.P. 077 6155839, 077 6309939. (29699)

### தவறிவிட்டது

முல்லையடி, பளையைச் சேர்ந்த கந்தையா யோகேஸ்வரி என்பவரது தே.அ.அ(506243351V), வி.அ.அ, மகன் சுபாஸ்கரனின் தே.அ.அ (742934004V) என்பன 14-03-2004 கட்டைவேலிக்கும் கலிகைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பளை, அஞ்சலகத்தில் ஒப்படைத்துதவும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன். (29757)

பொன்னையா சுகந்தன் என்பவரது தே.அ.அ(820870344V), வி.அ.அ (0902030025) என்பன 19.2.2004 அன்று அளவெட்டியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 93/5, பிறவுண் வீதி, மதவடி லேன், கலட்டி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கொடுத்துதவும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (29759)

### வாடகை வீடுகள்

அரச சேவையிலுள்ள சிறிய குடும்பமொன்றுக்கு சென்ஜோன்ஸ், பற்றிக்ஸ, கச்சேரியை அண்டிய பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவைப்படுகிறது. தொடர்பு: விளம்பர இல. 2201 மே/பா உதயன். (29750)

யாழ்நகருக்கு அருகில் நல்ல நிலையிலுள்ள வீடு வாடகைக்குண்டு. (அரச/ அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஏற்றது) தொடர்பு: சி.பரமநாதன் T.P. 222 2916,0777 739836. (29763)

## இலவச நீரிழிவுப் பரிசோதனை

அன்னை நாகா பூட் சிற்றியின் முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி Hemas Pharmaceutical (Pvt) Ltd. இன் அனுசரணையுடன் நீரிழிவு நோயாளர்களுக்கான இலவசப் பரிசோதனை 19.03.2004 வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் அன்னை நாகா பூட் சிற்றியில் (175, K.K.S. வீதி) நடைபெறவுள்ளது. ஆர்வலர்களைப் பங்குபற்றி பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.

**HEMAS PHARAMACEUTICAL (PVT) LTD**
**COLOMBO.**

(சி-33674)(18-21-12-19)

உ

தலையாளி

ஞானவைரவர் ஆலய வழிபடுநர் சபை

## பொதுக்கூட்டம்

எதிர்வரும் 11-04-2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் வழிபடுநர்சபைப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

**புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது.**

ஆகவே உபயகாரர்கள், வழிபடுநர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தலையாளி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

- நிர்வாக சபையினர்.

(29764) (19-11-19-21)

## யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்க
## விசேட பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட சமதான நீதிவான்கள் சங்க விசேட பொதுக்கூட்டம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தலைவர் லயன் க.நாகராசா தலைமையில் எதிர்வரும் (21-03-2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு ஆரம்பமாகும். அன்று பிரதேச செயலர் பிரிவுக்கான குழுக்கள் தெரிவாகும். யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சமாதான நீதிவான்களையும் சமுகம் கொடுத்துச் சிறப்பிக்குமாறும் சங்கத்தில் அங்கத்தவராக இணையுமாறும் வேண்டுகின்றோம்.

இணைச்செயலாளர்கள்,
டாக்டர் லயன்ஸ் எஸ்.அருளானந்தம் (ச.நீ.)
ச.தேவதாசன் (ச.நீ.)

(29765) (26-21-11-19)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 - 07 - 1929



மறைவு
22 - 03 - 2001

அமரர் **கதிரேசு சின்னக்கண்டு**

திதி: 18.03.2004

அன்புடனே எமை அணைத்து
அவனியிலே எமை ஆளாக்கி வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வத்தை
என்றென்றும் நாம் மறவோம்.

*சிவன்கோயிலடி,*
*சாவகச்சேரி.*

அன்புடன் நினைவு கூரும்:
-குடும்பத்தினர்.

(29752)(21-11-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சிவனடியார் பிலோமினா

17-02-2004 அன்று இறைவனடி சேர்ந்த மயிலிட்டியைச் சேர்ந்த **திருமதி சிவனடியார் பிலோமினா** அவர்களின் ஞாபகார்த்தமாக இன்று 18-03-2004 நடைபெறும் மதியபோசனத்திலும் எதிர்வரும் 22-03-2004 அன்று காலை 6.30 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் நடைபெறும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலி ஒப்புக் கொடுத்தலிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பீச் றோட்,
பருத்தித்துறை. (29753)(26-21-11-19)

தகவல்:
**சி.சிவபாதம்** *(மகன்)*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
07 - 11 - 1927



மறைவு
17 - 02 - 2004

### திருமதி இராமலிங்கம் இராசமணி

அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழி பேசி
பண்பாய் எமை வளர்த்த அன்புத் தெய்வமே!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை
வேண்டுகின்றோம்.

*அங்கிலிப்பாய்,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

தகவல்:
(29758) இ.ஜெயபாலன்.

- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(24-21-11-19)

## Jayoda ஜயோதா ජයෝදා
## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல 6119989 முதல் 6133093 வரை
சீட்டிழுப்பு இல.15 திகதி 15-03-2004

வெற்றி எண்கள் **5 2 3 3 2 8** சுப்பர் எண் **6**

சுப்பர் ஜக்பொட் பரிசு **15,284,575/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 15,284,575/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 600,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 115 | 5,000/- | 575,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,141 | 500/- | 570,500/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 11,335 | 50/- | 566,750/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 112,405 | 10/- | 1,124,050/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 14 | 5,000/- | 70,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 108 | 1,000/- | 108,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,143 | 100/- | 114,300/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 11,241 | 20/- | 224,820/- |
| மொத்தம் | 137,515 | | 4,953,420/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு.4,953,420/-

**இந்த வியாழக்கிழமைக்கான**
**சுப்பர் ஜக்பொட் ரு.15,599,975/-**

தொடர் இல. 7095762க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மார்ச் 18ம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6129116-0-53
6125160-3-46
6120261-3-25
6121011-9-48
6128880-7-09

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விதியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தர் இளையகுட்டி

பலாலியைப் பிறப்பிடமாகவும் தம்பாலை, அச்சுவேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் இளையகுட்டி 16.03.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிராசியின் அன்புக் கணவரும் பரஞ்சோதிலிங்கம், பரமேஸ்வரி, நீலாம்பிகை, கண்மணி, கணேசலிங்கம்(பிரான்ஸ்), மகாலிங்கம், தங்கராஜா (ப.நோ.கூ.சங்கம், உடுப்பிட்டி), காலஞ்சென்ற சிவராசா, தவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சின்னையா மற்றும் நாகராசா, இரத்தினசிங்கம், மலர், சாந்தி, தர்சினி ஆகியோரின் மாமனாரும் கோமதி, சுதாகரன், யோகேஸ்வரி, லோகேஸ்வரி, கோணேஸ், புகனேஸ்வரி, நகுலேஸ்வரன், உமா, பானுமதி, கீர்த்தி, தினேஸ், மயூரினி, சுதாஜினி, ரேணுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2004) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*தம்பாலை,*
*அச்சுவேலி.* (29748) (11-21-19)

தகவல்:
பிள்ளைகள்.

### சாம் S.சீவரத்தினம்

சாம் S.சீவரத்தினம் ஆஸ்திரேலியாவில் காலமானார். அன்னார் சுகிர்தம் அவர்களின் அன்புக் கணவரும் மனோகரன், இந்திரன், கிறீஸ்ரின் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் இராசரத்தினம், செல்வரத்தினம், குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை மறுதினம் (20-03-2004) சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் மறைவையொட்டிய ஜெபக்கூட்டம் J.S.இராசரத்தினம் அவர் களின் இல்லத்தில் 20.03.2004 அன்று பி.ப.4.00 மணிக்கு முதலாம் குறுக் குத்தெரு, பருத்தித்துறையில் நடைபெறும்.

முதலாம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை. (சி-33678)(26-21-11-19)

தகவல்:
J.S.இராசரத்தினம் *(சகோதரர்)*

# வெல்லப்போவது யார்? வடக்கின் பெரும் போரில்!





வடக்கில் பெரும்போர் என கூறப படும் யாழ்.மத்திய கல்லூரி, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையேயான துடுப்பாட்டப்போட்டி ஒரு- நூற்றாண்டை வெற்றிகரமாகத் தொடடுள்ளது.

இதனை இருபாடசாலைகளும் பாரம்பரியமாகப் பேணி பாதுகாத்து விளையாடி வருகின்றமையை அனைதது் கிரிக்கெட் ரசிகர்களும் ஆதரவாளர்களும் ஏன் வடக்கு வாழ் தமிழ்மக்களும் சிறப்புடன் பாராட்டுகின்றார்கள்.

மறுபக்கம் தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் உண்டு. இன்று வரை இப்பாடசாலைகளில் இருந்து வெளியேறிய துடுப்பாட்ட வீரர்கள் யாரும் தேசிய மட்டத்தில் மிளிரவில்லையென்பது மனதை நெருடுகின்றது. இதேநேரம் பாடசாலை மட்டத்திலான தேசிய மட்ட அணிகளில் இப்பாடசாலைகளின் வீரர்களும் பங்கேற்றுக் கொண்டதும் வெளிநாடுகளுக்குச் சென்று விளையாடியதும் மகிழ்ச்சியே.

தமிழ் குடிமகன் என்ற ஒரே காரணத்திற்காக புறந்தள்ளப்பட்டு வசதி வாய்ப்புகளை அரசு வழங்காது விட்டமையும் வீரர்களை உருவாக்குவதல் காணப்பட்ட பின்னடைவுகளையும் எண்ணிப் பார்க்கவும் நாங்கள் தவறவில்லை. எனினும் சர்வதேச தரத்திலான வீரர்களை உருவாக்க நாங்கள் என்ன செய்தோம் என்பதும் கேள்விக் குரியதே.

இற்றைக்கு பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் ஆதரவாளர்களின் முன்னிலையில் ஒரு நூற்றாண்டை நிறைவு செய்யும் போட்டி பல்வேறு குதுகலங்கள் மற்றும் கடந்த கால நாயகர்களுக்கான மரியாதைகளுடன ஆரம்பமாகின்றது.

'இன்றுமுதல் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு யாழ். குடாநாட்டின் மூலைமுடக்கெல்லாம் ஒலிக்கப் போகின்ற சென்றல், சென்.ஜோன்ஸ் அணியின் மோதலில் கிடைக்கப் போகும் வெற்றிக்கனி யாருக்கு உரியது என்பதையிட்டும் ரசிகர்களிடம் பரபரப்பான வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

இந்த ஆண்டு இரு அணிகளும் பல பாடசாலை மற்றும் கழகத்திற்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மொத்தமாக இந்த ஆண்டு 11போட்டிகளில் கலந்துகொண்டுள்ளது. இதில ஒன்று கழகத்துடன் ஆடப்பட்டுள்ளது. 3ஆட்டங்கள் மட்டுப்படுத்திய 50ஓவர்கள் கொண்டவையாக அமைந்துள்ளன.

மூன்று பாடசாலைகளுடன் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். மததிய கல்லூரி நூற்றுக்கு மேற்பட்ட ஓட்டங்களினால் மூன்று அணிகளையும் வெற்றி கொண்டுள்ளதுடன் கழகத்துக்கிடையேயான போட்டியில முதல் இனிங்ஸில் பெற்றுக்கொண்ட ஆட்டத்தை சமப்படுத்தியும் உள்ளனர்.இரு நாள் ஆட்டங்கள் 7 இல் 5 ஆட்டங்களைச் சமன் செய்து 2இல் வெற்றியும் பெற்றுள்ளனர்.

குறிப்பாக யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரொஹான், ரஜீவகுமார், ஜசிந்தன் ஆகியோர் சதம் அடித்துள்ளனர். ரொஹான் மூன்று சதங்களைப பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். பந்து வீச்சிலும் முன்னணி வீரரான ரஜீவகுமார் 9 போட்டிகளில 53 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார் என்பதும் சுட்டிக்காட்ட வேண்டியதாகும்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி 9ஆட்டங்களில் பங்கேற்றுள்ளது. இதில் ஒன்று யாழ்.பல்கலைக்கழக அணிக்கு எதிரானது. ஏனைய 8ஆட்டங்களில் 4ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது. 4ஆட்டங்களைச் சமன் செய்துள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்துடனான மூன்று நாள்கள் கொண்ட ஆட்டம் ஒன்றில் வெற்றியீட்டி இருக்கின்றார்கள் என்பது விசேடம்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் இந்த ஆண்டு ஒரு வீரர் மட்டுமே சதத்தைப் பெற்றுள்ளார். தினேஷ் 108 ஓட்டங்களை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கு எதிராகப் பெற்றுள்ளார்.

இரு அணிகளுமே வெற்றி வாய்ப்புகளுக்கான பல்வேறு வியூகங்களையும் பல்வேறு வடிவத்தில் அமைத்து விட்டே களத்தில் பூவா? தலையா? போடுவதில் இறங்கப் போகின்றன.

யாழ்மத்திய கல்லூரி பூவா, தலையாவில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி - தனது ஒருநாள் ஆட்டங்களின் அனுபவத்தைக் கொண்டு - ஓட்டங்களைக் குவித்தால் சென்.ஜோன்ஸ் அணி நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடலாம்.

இந்த ஆண்டு தான் விளையாடிய மூன்று 50ஓவர்கள் ஆட்டங்களிலும் 240இற்கு மேற்பட்ட ஓட்டங்களை மத்திய கல்லூரி அணி பெற்றுள்ளது. பந்துவீச்சிலும் கூட இவர்களின் கை ஓங்கிய தன்மையை ஏனைய பாடசாலைகளுக்கு இடையேயான போட்டி முடிவுகள் வெளிக்காட்டுகின்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் மெதுவாக ஓட்டங்களைச் சேகரிப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். எனினும் நீண்ட நேரம் நின்று நிதானமாக விளையாடும் திறன் அவர்களின் பலம்.

மூன்று நாள்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் மூன்று நாள்களும் களைப்படையாது சலிப்படையாது விளையாடும் ஆற்றல் மத்திய கல்லூரி வீரர்களுக்கு உண்டா என்பது மறுபக்கம் பார்க்கவேண்டிய தாகும்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள மிக அண்மையில் அதாவது ஒரு வாரத்துக்குக்குள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியுடன் மூன்று நாள்கள் கொண்ட ஆட்டத்தில் மோதி வெற்றியும் கண்டுள்ளார்கள். இந்நிலைமையில் யாழ்.மத்திய கல்லூரி வீரர்கள் அதிரடி ஆட்டத்தை மேற்கொண்டு ஓட்டங்களைக் குவித்தாலும்கூட சடுதியாக அதற்கு முகம் கொடுத்து ஆட்டத்தின் தன்மையை தேவைக்கு ஏற்ப மட்டுப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் கூடிய ஆற்றல் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்களுக்கு உண்டு. அதற்கான அனுபவத்தை அவர்கள் பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு விளையாடிய ஆட்டங்களில் சென்.ஜோன்ஸ் அணி தனது முதல் இனிங்ஸில் ஆகக் கூடுதலாக 5விக்கெட் இழப்புக்கு 262ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மத்திய கல்லூரி அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

**வல்லவன்**

ஆகக் குறைந்த ஓட்டங்களாக சென். ஜோன்ஸ் கல்லூரி 125 ஓட்டங்களையும் மத்திய கல்லூரி 90 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்கள்.

இரு அணியினரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பதை அவர்களின் கடந்த ஆட்டங்கள வெளிப்படுத்தி நிற்கின்றன.

இரு அணிகளுமே நூற்றாண்டை முடிக்கும் ஆட்டம் ஒன்றில் தோல்வியைத் தழுவ விரும்பமாட்டார்கள்.

இரு அணிகளுமே வெற்றிக்கனிக்காகத் தமது சகல வளத்தையும் திறமையையும் முழுமையாகக் காட்டியே விளையாடுவார்கள். ஆகையால் தோல்வியை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்நிலைமையில் வெற்றிக்கான வாய்ப்பு கையை விட்டு விலகும் என எதிர்பார்க்கும் அணி மிகவும் துணிச்சலுடன் தடுத்தாடும் நடவடிக்கையில் ஈடுபடும்.

இதனை முறியடித்து ஆடும் பொறுப்பு எதிரணியினுடையதாகவே இருக்கும். இதேநேரம் ஆர்வலர்கள் அபிமானிகளுடைய கத்தல், குழப்பங்கள் வீரர்களை உளவியல் ரீதியாகப் பாதிப்படையாமல் பார்த்துக் கொள்வதும் இரு அணிகளின் வெற்றிக்குமான வழியில் முக்கியமானது.

வடக்கில் தமிழ்மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப்போவதாகக் கூறப்படும் தேர்தல் சூடு பிடித்ததோ இல்லையோ? வடக்கின் மாபெரும் போர் சூடு பிடித்து விட்டது. திருவிழா இன்று ஆரம்பமாகிவிடும்.

யா அல்லாஹ்

அன்று



இன்று

யாவாரம் செஞ்சிக்கிட்டு இருந்த நான்
கொழும்புக்கு கொண்டு வந்தது
உடுத்திக்கிட்டிருந்த உடுதுணி மட்டுந்தான்.

மன்னாரில சின்ன கட நடத்தி நல்லா யாவாரம் செஞ்சிக்கிட்டிருந்த எமக்கு வீடு வாசல போட்டுட்டு கொழும்புக்கு வர நேர்ந்தது.சம்பாதித்தது எல்லாமே தண்ணியில போய்த்திட்டது. யுத்தத்தோட கொடும அதற்கு சம்பந்தப்பட்ட எமக்கு தான் தெரியும்.அடையாள அட்ட மறந்திருச்சின்னா தமிழ் பேசுற நாம நாள் பூராவும் பொலிஸ் கூட்டில வாடனும்.சந்தேகமும் பயமும்தான் எங்கும்.



ஆனா, கடந்த ரெண்டு வருஷமா யுத்த நிறுத்தம் செஞ்சதால ஏதாவது யாவாரம் செய்து நாலு பணம் தேட முடிஞ்சது. இந்த யுத்த நிறுத்தம் நிலையான சமாதானமா மாறனும் அதற்காக பாடுபடும் ஐதேகட்சிக்கு எமது ஆதரவையும் பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்களுக்கு எமது ஆசீர்வாதத்தையும் தெரிவிக்கனும்.



நாட்டை வளமாக்க
சமாதானத்தைத் தேர்ந்தெடுங்கள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின்
அமைவிடத்திற்கு பொருத்தமான காணியை
வழங்கக் கூடியவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நான்கு கிலோமீற்றர் சுற்றாடலுக்குள் அண்ணளவாக 50 பரப்புக் காணியை வழங்கக்கூடியவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன. ஒருவருக்கு மேற்பட்டவர்களின் உடைமையாகவுள்ள காணிகளை இணைத்து வழங்கக்கூடிய வகையிலும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கலாம். மனுக்களை சமர்ப்பிக்க விரும்புவோர் கீழே குறிப்பிடப்படும் விவரங்கள் உள்ளடக்கப்பட்டு 31.03.2004ஆம் திகதிக்கு முன்னதாக 'பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி' என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'காணி வழங்கல்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

காணியின் மொத்தப்பரப்பு. பரப்பு ஒன்றின் விலை. காணி அமைவிடம். விலை மனு சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(சி-33686)(24-13-12-31)

## திருட்டுடன் தொடர்புபட்ட இரு சந்தேக நபர்கள் கைது

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ். பொலீஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு இடங்களில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரு இளைஞர்கள் யாழ். குற்றவியல் பொலீஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஏழு சைக்கிள்கள் உட்பட கையடக்கத் தொலைபேசிகள், சீடி.பிளேயர், வீடியோக் கமராக்கள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவர்களையும் தீவிர விசாரணைக்குட்படுத்திய பொலீஸார், இவர்கள் பல லட்சம் ரூபா பொருள்களைத் திருடியவர்கள் என்று தெரிவித்துள்ளது.

இவர்கள் இருவரும் நாவாந்துறை, கோண்டாவிலைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-7)

## நீங்கள் ஒரு சட்டத்தரணி ஆக வேண்டுமா?

ஆம் என்றால் இன்றிலிருந்து நீங்கள்
அதற்குத் தயாராக வேண்டாமா?
உங்கள் கனவை நனவாக்க
யாழ். மண்ணிலேயே ஓர் அரிய சந்தர்ப்பம்!

இலங்கைச் சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள் எதிர்வரும் 20.03.2004, 21.03.2004 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு Jaffna College Undergraduate Department, 464, Hospital Road, Jaffna இல் நடத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது, உங்கள் வெற்றியை உறுதிப்படுத்த எங்களுடன் இணையுங்கள்.

விவரங்களுக்கு : 021 222 3382, 0777 759988

Academy For
Professional Innovation

(சி-33688)(24-12-31-13)

# அரசாங்க அறிவித்தல்

நாடாளுமன்றத் தேர்தல் - 2004.04.02
கனிஷ்ட தலைமை வகிக்கும் அலுவலர்களுக்கான / வாக்களிப்பு
எழுதுநர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் 2004 தொடர்பாக நடைபெறவுள்ள மேற்படி கூட்டங்கள் பின்வரும் இடங்களில் அவற்றுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் நடைபெறவுள்ளன. இவற்றுக்கான அறிவித்தல்கள் ஏற்கனவே சகல கனிஷ்ட தலைமை வகிக்கும் அலுவலர்கள் / வாக்களிப்பு எழுதுநர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே, அறிவிக்கப்பட்டதற்கமைய குறிப்பிட்ட திகதியில் உரிய நேரத்தில் தவறாது அவர்களைப் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. யாழ். இந்துக் கல்லூரி - 2004.03.20 - காலை 9.30 / மாலை 2.00 மணி
2. இராமநாதன் கல்லூரி - 2004.03.21 - காலை 9.30 / மாலை 2.00 மணி
3. மானிப்பாய் இந்துக் கல்லூரி - 2004.03.20 - காலை 9.30 / மாலை 2.00 மணி
4. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி - 2004.03.21 - காலை 9.30 / மாலை 2.00 மணி
5. சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 2004.03.20 - காலை 9.30 / மாலை 2.00 மணி
6. வேலணை சரஸ்வதி வித்தியாலயம் - 2004.03.21 - காலை 9.30 / மாலை 2.00 மணி
7. வட இந்து மகளிர் கல்லூரி - 2004.03.20 - காலை 9.30 / மாலை 2.00 மணி
8. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - 2004.03.21 - காலை 9.30 / மாலை 2.00 மணி
9. கிளிநொச்சி மகா வித்தியாலயம் - 2004.03.20 - காலை 9.30 / மாலை 2.00 மணி

செ. பத்மநாதன், தெரிவத்தாட்சி அலுவலர்,
இல. 10, யாழ். தேர்தல் மாவட்டம்.

(சி-33687)(12-13-31-24)

## வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும்

We Serve

இலவச கண் சிகிச்சை முகாமும்
பொது மருத்துவ முகாமும்

இடம்:
நெல்லை முருகன் திருமண மண்டபம், நெல்லியடி

20.03.2004 சனிக்கிழமை மு.ப. 10.00 மணி தொடக்கம்
S.M.பெர்னாண்டோ நிறுவனத்தினரால்
கண் பரிசோதனை செய்யப்படும்.

21.03.2004 ஞாயிறு மு.ப. 9.30 மணி தொடக்கம்
நீரிழிவு நோயாளிகளுக்கான பரிசோதனை, பற்சிகிச்சை,
பொது மருத்துவ சிகிச்சை ஆகியன
தேர்ச்சிபெற்ற டாக்டர்களினால் மேற்கொள்ளப்பட்டு
மருந்துகளும் வழங்கப்படும்.

கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கு
அன்று கண்ணாடிகளும் வழங்கப்படும்.

முன் பதிவுகள் செய்யும் இடங்கள்:

★ சிவசக்தி இரும்பகம் - நெல்லியடி-பஸ் நிலையம் முன்பாக.
★ தர்சை ஐங்கரன் சனசமூக நிலையம் - கரவெட்டி மத்தி
★ நெல்லியடி பொது நூலகம் - வதிரி

லயன் ந.தங்கராசா
செயலாளர்.

(29774)(24-12-13-31)

# சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு........?!



தந்தை செல்வா

ஓங்கிய பெரும் விருட்சம்........
அதிலோர் சிட்டுக்குருவியின் சிறியதோர் கூடு,
குருவிகள் சிறிதெனினும், அதன் கீர்த்திகள்பெரிது
கட்டிய கூட்டினுள் உதயசூரியன் ஒளியும் இதமாகப்படவே
கீச்சுக்..... கீச்...என அவைகள் சந்தோசப்பட்டன.



ஜீ.ஜீ.பொன்னம்பலம்

**எங்கிருந்தோ ஒரு கல்லு! கூட்டினில் படவே......**
**கூடு கலைந்தது......... காகங்கள் பறந்தன.......! குருவிகள் தனித்தன.**



தனித்த குருவிகள் கூட்டினைக் கட்டத் தயாராகிவிட்டன,
இனியும் காகங்கள் வராமல் இருக்க......?
வாசலில் போட்டன பெரியதோர் பூட்டு.......!
தமிழினம் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து சுயநிர்ணய உரிமையுடன்
நம் மண்ணில் வாழ்ந்திட.........
ஆதரவளிப்பீர்......

**வீ.ஆனந்தசங்கரி** (தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி)
தலைமையிலான

**சுயேச்சைக் குழு : 1**  **X**

( தமிழர் விடுதலைக் கூட்டணி)
- யாழ். மாவட்டம்-

குறிப்பு : எக்காரணங்கொண்டும் சுயேச்சைக்குழு 01 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளாது என உறுதியாகத் தெரிவிக்கின்றோம். வீண் வதந்திகளைத் தயவுசெய்து நம்பவேண்டாம்.



உ
சிவமயம்
இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள்
யாழ். புண்ணியபூமிக்கு மூன்றாவது முறையாக
வருகை தந்துள்ளார்.

**திரு. P.T.R.**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில் முன்னேற்றத் தடங்கலா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத் தடையா?
ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள்.

**இடம்: பாலாஜி இன் விடுதி**
292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.
(29?31)(12-40)


# பாராட்டுகிறோம்



எமது யாழ்.நகர் கிழக்கு (J/74) கிராம அலுவலர் **திரு. கதிரவேல் நித்தியானந்தன்** அவர்கள் தரம் I இற்கு பதவியுயர்வு அடைந்ததையிட்டு இராசாவின்தோட்டம் அருள்மாதா சனசமூக நிலையம் சார்பாகப் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

நிர்வாகத்தினர்,
அருள்மாதா சனசமூக நிலையம்.
(29784)(40-12)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் கிழக்கு காரைக்கால்
சிவன் கோவிலடியைச் சேர்ந்த
**சீவரத்தினம் சதீஸ்குமார்**
B.Sc.Eng(Hons)
அவர்கள் இன்று மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நண்பர்கள்
சுஜி, கரன், வவா,
கருணா, ரவி.

இணுவில் கிழக்கு,
காரைக்கால்.
(C/33692)(38-12-40)


# சேரன் வாணிபம்

## பணிநிலை வெற்றிடம்

- பணிநிலை: வெதுப்பக உற்பத்தியாளர் - பயிலுநர் ஆண்
- தகைமைகள்: க.பொ.த.[சாதாரணதர] தமிழ், கணிதம் உட்பட 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
- கொடுப்பனவுகள்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
- பயிற்சிக்காலம்: 06 மாதங்கள்

☞ மேற்காணும் தகைமை உடையவர்கள்-
☐ தேசிய அடையாள அட்டை
☐ பிறப்புச் சான்றிதழ்

ஆகிய ஆவணங்களுடன் 23.03.2004 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கீழுள்ள முகவரிக்கு நேரில் வருகை தருமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள்.

**அரஸ்கோ**
இல.431, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (C/33690)(38-12-40)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு
26
06
1934



உதிர்வு
18
02
2004

செல்வி
## செல்வவிநாயகம் இராஜேஸ்வரி
(இளைப்பாறிய ஆசிரியை)

**அன்னையிலும் இனியவராய் அனைத்துதவி புரிந்துநின்ற
இன்குணவதியாரே எமைப்பிரிந்து மறைந்தீர்கள்! ஏன்?
சன்மார்க்க நெறியினிலே சதாபொழுதும் லயித்திருந்தாய்
அன்பான பிணைப்பறுத்து அகன்றனையோ எமைமறந்தே?**

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.03.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. ஆகவே, எமது உற்றார், உறவினர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதோடு, நாளை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் பணிவுடன் அழைக்கிறோம்.

"பாக்கியவாசா"
நாவலடி, பருத்தித்துறை.
- குடும்பத்தினர்.
(29775)(40-12)

# ரதபவனி நேற்று ஆரம்பமாகியது

வடமராட்சி,மார்ச்18

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 150 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ரதபவனி நேற்றுப் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் இருந்து ஆரம்பமாகியது.

தம்பசிட்டி வழியாக வருகை தந்த ரதத்தை வட. இந்துமகளிர் கல்லூரி மாணவிகள் புஸ்பாஞ்சலி செய்து வரவேற்றனர்.

பின்னர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தொண்டமனாறு சந்நிதி முருகன கோவில் வழியாக ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தை வந்தடைந்த ரதபவனி பின்னர் நேற்றிரவு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தைச் சென்றடைந்தது.

இன்று காலை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியை நோக்கி ரதபவனி புறப்படும். (எ-173)


## ட்றைவர் தேவை

கொழும்பிலே சொந்தப் பாவனையில் உள்ள வான் ஒன்றை செலுத்துவதற்கு ட்றைவர் தேவை. தங்குமிட வசதி உணவு வசதி என்பன செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0717 323192 (சி-33607)(36)

## கடை வாடகைக்கு

187, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: பவா,
187, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி
(யூனிவேர்சல் பான்சி),
யாழ்ப்பாணம்.
(29777)(40)

## விற்பனைக்கு

மணிக்கூட்டு மொடல் ஸ்கூட்டர், 27 KV ஜெனரேட்டர் பேர்க்கின் இங்கிலாந்து என்பன விற்பனைக்கு உண்டு.
கொனிக்கா கலர் லாப்,
14,ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோவில் அருகில்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021-222-3493
கையடக்கத் தொலைபேசி:
0777 730567
(C-33694)(40)

## வேலையாள்கள் தேவை

யாழ். போன் ஷொப்பிற்கு சிட்டை எழுதுநரும் விற்பனையாளரும் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் நேரில் தொடர்புகொள்ளவும்.
இல.10, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
(C-33693) (40-12)

## ராஜா யாழ்ப்பாணம்



சூர்யா, லைலா, திரிசா நடித்த



மௌனம் பேசியதே (சினிமா)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (மு.தே.)
(C/33519)(12)

## லிபேட்டி அச்சுவேலி



விஜய், ஜோதிகா, தேவயானி, வடிவேல் மற்றும் பலர் நடித்த
பிரண்ட்ஸ் (சினிமா)
காட்சிநேரம்: 3.00, 7.00 (பு.தே.)
(சி-33657)(12)

## நிறைஞ்சனாஸ் சங்கானை



மக்கள் திலகம் எம்.ஜி. ஆர்.
லதா, மஞ்சுளா நடிக்க
நேற்று இன்று நாளை
(புத்தம் புதிய பிரதி -சினிமா)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.தே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
SPY KIDS II
(C/33510)(12)

## நாகம்மாஸ் சுன்னாகம்

டொல்பி ஒலியமைப்புடன்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
பொலிஸ் அதிகாரியாக
சரத்குமார்,
லைலா,
வடிவேலு நடிக்க



கம்பீரம்
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.தே.) (C/33520)(12)


# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



## முத்துக்குமாரு சுந்தர்ராஜ்
(2002. கணிதப்பிரிவு, யா/ஹாட்லிக் கல்லூரி மாணவன், பருத்தித்துறை)

மலர்வு
09.04.1985

உதிர்வு
19.03.2001

பாசமுள்ள சுந்தரே!
எம்மை விட்டு நீங்கி மூன்று ஆண்டுகள் ஆனதோ
எத்தனை உறவுகள் இருந்தாலும் - நீங்கள்
எம்மீது காட்டும் பாசம் வருமா?
தென்றலோடு தென்றலான எம் சுந்தரே!
என்றும் உன் நினைவில் நாம்.....!

கணையன்தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
(29755)(38-12-40)

பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்.

# கண்ணீர் அஞ்சலி

## நடிகர்மணி மு.புஸ்பராசா (அற்புதம்)



எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்ட நடிகமணி மு.புஸ்பராசா அவர்கள் 16.03.2004 இல் காலமானதையிட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும், வேதனையும், அடைகிறோம்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருடன் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நேருஜி கி.மு.சங்கமும்,
சனசமூக நிலையமும்
கலைநகர், சித்தன்கேணி.
(C-33684)(40-12)

# மரண அறிவித்தல்கள்

## நடிகமணி முருகுப்பிள்ளை புஸ்பராசா
(இளைப்பாறிய அலுவலர், காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலை)



கலைநகர், சித்தன்கேணியைசேர்ந்த நடிகமணி முருகுப்பிள்ளை புஸ்பராசா (அற்புதம்) அவர்கள் 16.03.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலட்சுமியின் (மைனா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் புதல்வரும் திருமதி கமலேஸ்வரன் கலைவதனா (பிரான்ஸ்), திருமதி கலைமங்கை நகுலேஸ்வரன், திருமதி பிறேமலதா விக்கினேஸ்வரன், மாவீரர் கஜேந்திரன், புவனீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கமலேஸ்வரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தவதேவஜெகராசா (வவுனியா), நவநீதசிங்கம் (சவூதி அரேபியா), இலட்சுமணன் (பிரான்ஸ்), ஜெகன்மோகன் (வவுனியா), திருமதி மகாலட்சுமி சங்கரசிவம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் மருசா, பிரணா, காயத்திரி, கஜானா (பிரான்ஸ்), சுஜீவன், வேணுசன், கஜனி, பிரதாஸ், சாமினி, நிருசா, சயாளினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.03.2004) வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைநகர்,
சித்தன்கேணி.
(C-33685)(12-40)

தகவல்:
பிள்ளைகள்.

## தம்பையா காராளசிங்கம்
(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் வலி. தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்)

சுதுமலைமேற்கைப் பிறப்பிடமாகவும் ஆலாங்குழாய் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் தற்போது சுதுமலையில் வசித்தவருமாகிய தம்பையா காராளசிங்கம் அவர்கள் நேற்று (17.03.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாருடைய இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.
(29786)(38-12-40)

தகவல்:
கா.பிறேமி
(மகள்).

## மாரிமுத்து சின்னத்துரை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சின்னத்துரை அவர்கள் நேற்று (17.03.2004) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் மாரிமுத்துவின் மகனும் அமரர் சதாசிவத்தின் மருமகனும் அமரர் புவனேஸ்வரியின் கணவரும் நாகேஸ்வரி (ஆசிரியை கோண்டாவில் றோ.க.த.பாடசாலை), இராசேஸ்வரி, அமரர் லோகேஸ்வரி, நாகராஜா, தர்மசேனா (விலங்கியல்துறை - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன், சுந்தரலிங்கம் (ப.நோ.கூ.ச), முத்துக்குமாரசாமி, வசந்தி, சோமலதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.03.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் முழங்காவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முழங்காவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜபாதை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.
(29787)(40-12)

தகவல்:
தர்மசேனா
(மகன்).

# கருணாவின் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான அரசியல் தீர்விற்கும், சிங்கள மக்களின் ஆணையைப் பெற்று புதிதாகத் தெரிவாகும் அரசிற்கும் புலிகளுக்குமிடையில் பொதுத் தேர்தலை அடுத்து சமாதான முன்னெடுப்புக்கள் மீளவும் ஆரம்பமாகும்.

எமது அமைப்பின் அரசியல் இலக்குகளை அங்கீகரித்து தங்களின் ஏகப் பிரதிநிதிகளாகப் புலிகளை மீள உறுதி செய்யும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழீழ மக்கள் வாக்குகளை அள்ளிக் குவிப்பார்கள் என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம்.

தமிழ்த் தேசியப் போராட்டம் என்பது எமது மக்களின் ஒன்றுபட்ட அரசியல் சித்தாந்த இலட்சியத்தைக் குறித்து நிற்கிறது; தமிழரின் தேசிய ஆன்மாவையும், அபிலாஷைகளையும் பிரதிபலித்து நிற்கிறது; எமது மக்களுக்கே உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மென்முறையாலும், வன்முறையாலும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்த போராட்ட வரலாற்றின் பரிணாம வளர்ச்சியால் அது உருவகம் பெற்றது. ஒரு தனிமனிதனால் அதுவும், ஒரு தேசிய இயக்கத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு, கொண்ட இலட்சியத்தைக் கைவிட்டு நிற்கும் ஒரு தனிமனித கிளர்ச்சிவாதியால், ஒரு வெகுஜனப் போராட்டத்தின் தடுக்க முடியாத வரலாற்று ஓட்டத்துக்கு முட்டுக்கட்டை போட முடியாது.

*கேள்வி:* கருணா பிரதேசவாத உணர்வைக் கிளப்பியதோடு, தனது ஆள்களும் கிழக்கு மாகாண மக்களும், புலிகளின் தலைமைத்துவத்தினால் பிரதேச வேறுபாட்டின் அடிப்படையில் வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டனர் எனவும் கூறுகின்றார். இந்த விமர்சனத்துக்கு உங்கள் பதில் என்ன?

*பதில்:* தமிழ் மக்கள் தனித்து ஒன்றிணைந்தவர்கள் என்ற அவர்களின் தேசியத்தின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் உளப்பூர்வமாக வெளிப்படுத்தி நிற்கும்படி கோரப்பட்டிருக்கும் இந்த இக்கட்டான தருணத்தில் பிரதேச பகைமை தொடர்பான உணர்வைக் கிளப்ப கருணா தேர்ந்தெடுத்திருப்பது துரதிர்ஷ்டவசமானது.

உளுத்துப்போன பிரதேச பாகுபாட்டுப்போக்குக்கு பிரபாகரன் அப்பாற்பட்டவர் என்பது கருணாவின் அடிமனத்துக்குக் கூட நன்கு தெரியும்.

மரபு ரீதியாக தமிழ்ச் சமுதாயத்தில் நூற்றாண்டுகளாக ஊறிப்போயிருந்த சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளை விஞ்சி, ஐக்கியப்பட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கட்டியெழுப்பியதற்காகத் தமது மக்களால் பெரிதும் விரும்பி ஏற்றப்படுபவர் பிரபாகரன்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்ப காலம் தொட்டே தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் என்ற கோட்பாட்டையே மூலாதாரக் கொள்கையாக வகுத்துக்கொண்டது. ஒருமைப்பட்ட, ஐக்கியப்பட்ட தமிழர் தாயகம் என்பதற்காகவே பதினெட்டாயிரம் போராளிகளும், எண்பதாயிரம் தமிழ்ப் பொதுமக்களும் தமது உயிரைத் தியாகம் செய்தனர்.

பிரபாகரனுடன் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சேர்ந்து வாழ்ந்தவன், இணைந்து தொழிற்பட்டவன் என்ற வகையில் அவரின் எண்ணத்திலோ, செயலிலோ பிரதேசவாதத்திற்கான சாயலைக்கூட நான் கண்டதில்லை. புலிகளின் தலைமைத்துவத்தின் மீது கருணா சுமத்தும் பிரதேசவாதக் குற்றச்சாட்டு இல்லாத தொன்று; அபாண்டமானது. அவரின் ஆள்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கமுடையது.

பிரிக்கப்பட முடியாத ஐக்கிய தமிழர் தாயகக் கோட்பாட்டின் மீது பிரபாகரன் எவ்வளவு ஆழமான பற்றுறுதி கொண்டவர் என்பதை நிரூபிக்க நான் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடமுடியும்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவுடன் பேச்சு நடந்த காலம் அது. ஒரு கட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸ, தாம் வடக்குக்கு தனிநாடு போன்ற அரசியல் விடுதலையைத் தருகிறார் எனவும் ஆனால், கிழக்கைத் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியாக எப்போதுமே அனுமதிக்கமாட்டார் எனவும், பிரபாகரனுக்கு ஒரு தகவலைத் தெரிவிக்குமாறு என்னைக்கேட்டுக்கொண்டார். நான் இந்தத் தகவலை பிரபாகரனுக்குத் தெரியப்படுத்தியபோது, "தயவு செய்து பிரேமதாஸவிடம் கூறுங்கள், நான் வடக்கை வேண்டுமானால் கூட விட்டுவிடத் தயார். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் கிழக்கு மாகாணத்தையும், அந்த மக்களையும் கைவிடத் தயாரில்லை" என்று கூறினார் பிரபாகரன்.

கிழக்கு மக்களைப் பொருளாதார அபிவிருத்தியில் கணக்கெடுக்காது பாரபட்சம் காட்டுவதாகக் கூறப்படும் விமர்சனம் பற்றிக் கூறுவதாயின், வடக்கு - கிழக்கு இரண்டுமே போரினால் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்றுதான் சொல்வேன்.

வடக்கு அடிக்கடி மோசமான போர்களையும், உள்கட்டமைப்பு அழிவுகளையும் எதிர்கொண்டதோடு பெருந்தொகையான இடம்பெயர்ந்த மக்களையும் கொண்ட பிரதேசமாகும்.

வடக்கு - கிழக்கு இரண்டுமே பொருளாதார ரீதியில் பின்னடைவு கண்ட பகுதிகள்தான். அவற்றுக்குப் பாரிய புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகள் அவசரமாகச் செய்யப்பட வேண்டியிருக்கின்றன.

வன்னியில் வரிவிதிப்பு மூலம் பெறப்படும் நிதியைக் கொண்டும் அத்தகைய பாரிய புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளைச் செய்துவிட முடியாது. எங்களுக்குப் பெருமளவிலான சர்வதேச உதவி தேவைப்படுகின்றது.

சர்வதேச உதவும் சமூகம் வழங்குவதாக உறுதியளித்த பெருந்தொகையான நிதி, கடந்த பலமாதங்களாகத் தெற்கில் நிலவும் அரசியல் இழுபறி காரணமாக வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை இன்னும் சென்றடையவில்லை.

இப்படியான நிலைமை இருக்கையில் கிழக்கை பொருளாதார ரீதியாக ஒதுக்கியதாகப் புலிகளின் தலைமையைக் கருணா குற்றம் சுமத்துவது நீதியற்றது.

அவசரப் பொருளாதார, மனித நேயத்தேவைகளைக் கருத்திற் கொண்டுதான் எமது தலைமைத்துவம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஸ்தாபிக்குமாறு முன்மொழிந்தது.

அதன் மூலம்தான் சர்வதேச உதவியோடு சிங்களவர்கள், முஸ்லிம்கள் உட்பட வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மக்களுக்குமான மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனருத்தாரணம் தொடர்பான பாரிய திட்டங்களை மேற்கொள்ளமுடியும்.

கருணா கூறுவது போல் புலிகளின் கட்டமைப்பில் பிரதானமாக முப்பத்தியைந்து பிரிவுகள் இல்லை. இராணுவ மற்றும் அரசியல் பிரிவுகள் என்பனவே முதன்மையான கட்டமைப்புகளாகும்.

இராணுவக் கட்டமைப்பு, மாவட்ட அடிப்படையில் மாவட்டங்களுக்கான இராணுவத் தளபதிகள் அதி உயர் தளபதியான பிரபாகரனுக்குக் கீழ் செயலாற்றக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல் பிரிவும் மாவட்டத் தலைவர்களைக் கொண்டுள்ளது. ஏனைய முக்கிய பிரிவுகளாக நிதி, சட்டமும் ஒழுங்கும், உளவுத்துறை, கல்வி ஆகியன உள்ளன. இவற்றுக்கான பொறுப்பாளர்கள் சிரேஷ்டத்துவம் அடிப்படையில் தான் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிரேஷ்டத்துவம், ஆற்றல், திறமை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு தான் தலைவர்களுக்குப் பிரபாகரன் பதவி உயர்வுகளை வழங்குகிறார்.

இந்த விடயத்திட்டத்தில் பிரதேசவாதத்துக்கு இடமேயில்லை.

*கேள்வி:* கருணா தான் ஐந்தாயிரம் வீரர்களைக் கொண்ட இராணுவக் கட்டமைப்பையும், கிழக்கு மக்களின் பின் பலத்தையும் கொண்டிருப்பதாகக் கூறுகின்றார். அத்தோடு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களும், சிங்களவர்களும் பூர்வீகமாக வசிப்பதால் அது தமிழர்தாயகத்தின் தொடர்ச்சியான பகுதி அல்ல என்றும் கூறுகின்றார். இது குறித்து உங்கள் கருத்து?

*பதில்:* கருணாவிடம் எத்தனை வீரர்கள் இருக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியாது. எமக்குத் தெரிந்ததெல்லாம் அவர் வசம் உள்ளவர்கள் அண்மையில் உள்வாங்கப்பட்டவர்கள், போராட்ட அனுபவம் அற்றவர்கள் என்பதுதான். அவர்கள் மோதல் தவிர்ப்பு காலத்தில் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள். வடக்கு - கிழக்கை உள்ளடக்கிய தமிழ்த் தாயகத்தை மீட்பதற்காகவே அவர்கள் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். தமிழ்த் தேசியத் தலைவருக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் செய்த வீரர்கள்தான அவரிடம் இருக்கிறார்கள். உண்மையில் சொல்வதானால், அவர்கள் விடுதலைப் புலிகளுக்காகத் தமது வாழ்வை அர்ப்பணிக்க உறுதியுரை எடுத்த பிரபாகரனின் விடுதலைப் போராளிகள், தேசியத்திற்கும், தேசியத் தலைவருக்குக் கட்டுப்பட்டும் நடப்பதாகச் சத்தியப் பிரமாணம் செய்து விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் மீது தனது தலைமைத்துவத்தைத் திணிப்பது கருணா இழைக்கும் படுமோசமான நம்பிக்கைத் துரோகமும் வஞ்சகமும் ஆகும்.

அவரது சிரேஷ்ட தளபதிகள், அரசியல் துறைப்பொறுப்பாளர்கள், பெருந்தொகையான போராளிகள் கருணாவைத் துறந்து பிரபாகரனின் தலைமையில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

பெரும்பாலானவர்கள் தன்னை விட்டு ஓடிவிடுவார்கள் என்ற பயத்தினால் முகாமுக்குள் பலத்த பாதுகாப்பின் கீழ் ஏனைய வீரர்களை அவர் தடுத்து வைத்திருக்கின்றார் என்பது எமக்குத் தெரியும்.

தன்னுடைய ஆள்களைத் தன்னுடைய கட்டளையின் கீழ் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட படை போன்று ஒழுங்குக் கட்டுப்பாட்டோடு எவ்வளவு காலத்திற்குப் பேணுகின்றார் என்பதில்தான் அவரது எதிர்காலம் தங்கியுள்ளது.

பிரச்சினையின் ஆரம்பம் பற்றிச் சரியாகத் தெரியாத மட்டக்களப்பு, அம்பாறை தமிழ் மக்களுக்கு, கருணாவின் அதிருப்தியும் அதனைத் தொடர்ந்து அவரை வெளியேற்றியதும் அதிர்ச்சி தரும் சங்கதியாகவே இருந்தது. இந்த வெளியேற்றம் நியாயமற்றது; உரிய காரணமற்றது என்றும் சிலர் கருதியிருக்கவும் கூடும்.

கருணா இழைத்தவை குறித்து தமிழ் பத்திரிகைகள் விமர்சித்து செய்தி வெளியிட்டன; அறிக்கைகளும் வெளியாகின. கருணாவின் கையாள்கள் செய்தி பரவக்கூடாது என்பதற்காக அவற்றை வழிமறித்து எரித்தனர்.

கருணாவுடன் சேர்ந்து தொழிற்பட்ட இராணுவத் தளபதிகளும், அரசியல் பொறுப்பாளர்களும் அவர் இயக்கத்திற்கும், தமிழரின் போராட்டத்திற்கும் எதிராக இழைத்த நம்பிக்கை துரோகத்தை வெளிப்படுத்தியதைத் அடுத்து, தமிழ் பொதுமக்கள் கருணாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னணியில் மறைந்துள்ள நியாயத்தைத் தற்போது உணரத் தலைப்பட்டுவிட்டார்கள்.

*கேள்வி:* பிரபாகரன் போர் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிக்கிறார் என்றும், அதற்காகத் தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஆயிரம் வீரர்களைக் கொண்ட படையணியை அனுப்புமாறு அவர் கேட்டுக்கொண்டதற்குத் தான் செவிசாய்க்கவில்லை என்றும் கருணா தெரிவிக்கிறாரே, இது உண்மையா?

தமது கிழக்குப் படையணிகளைப் பலிகொடுத்து புலிகளின் தலைமைத்துவத்தையும் வன்னிப் பிரதேசத்தையும் தாம் காப்பாற்றினார் என்று கருணா கூறுவது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

*பதில்:* மேலதிகப் படை அணி எதனையும் புலிகளின் தலைவர் கோரவில்லை. இதை நான் அவரிடமிருந்தே தெரிந்து கொண்டேன்.

புலிகள் தலைமைத்துவம் போருக்கான எந்தத் தயாரிப்பிலும் ஈடுபடவில்லை என்பதற்கு நான் உங்களுக்கு உத்தரவாதம் அளிப்பேன். நாங்கள் சமாதானத்திலும், இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமுறையில் தீர்வு காண்பதிலும் உண்மையாகவும் பற்றுறுதியோடும் எம்மை ஈடுபடுத்தியுள்ளோம்.

வன்னி நிலப்பரப்பில் 'ஓயாத அலைகள்' I முதல் IV வரை பெயரிடப்பட்ட எமது பிரதான யுத்தங்கள் அனைத்திலும் வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் இருந்தும் விடுதலைப் போராளிகள் பங்கேற்றனர்.

தமிழரின் தாயகத்தின் இதயமான வன்னியில் இருந்து செயற்படும் மத்திய கட்டளையகத்தை விடுவிக்கும் ஒரு விடுதலைப் போர் அது.

வன்னியில் உள்ள புலிகளின் இராணுவக் கட்டளைக் கட்டமைப்பை அழித்துச் சிதைக்கும் நோக்கில் நாற்பதாயிரம் துருப்புகளோடு பெரும் படையெடுப்பாக 'ஜயசிகுறு' (வெற்றி நிச்சயம்) இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தபோது எல்லா மாவட்டங்களிலும் உள்ள படையணியை அங்கு நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் நமது தலைமைக்கு ஏற்பட்டது.

எதிரியை அடித்து விரட்டி அவமானப்படுத்தும் பின்னடைவுகளை ஏற்படுத்தியதில் ஏனைய பிரிவினருடன் சேர்ந்து ஜயந்தன் படையணியின் துணிகரமான பங்களிப்பினை நாம் மறுப்பதற்கில்லை.

எதிர்த்துப் பதிலடி கொடுப்பதில் (ஓயாத அலைகள் மூன்று) எல்லாப் படையணிகளையும் இணைத்து வழி நடத்தும் தளபதி என்ற அந்தஸ்தை கருணாவிற்கு வழங்கியதற்காக அவர் பிரபாகரனை மெச்சவேண்டும்.

எமது மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும் விடுதலைக்கான யுத்தம் எனும் பொது அம்சத்தில் தமிழர் தாயகத்தின் எல்லாப் பகுதியைச் சேர்ந்தவர்களுமே மாவீரராகியுள்ளனர்.

ஒரு பகுதியினர் மற்றைய பகுதியினருக்காகப் பலியாகினர் என்று வாதிடுவது பிரதேசவாதத்தை மீள உயிர்ப்பிப்பதாகும். தமிழ்த் தேசப்பற்றுள்ள சகலரும் அதனைக் கண்டிக்கவும் வேண்டும்.

போரின் விளைவையும் போக்கையும் தீர்மானிப்பது அதில் பங்கேற்கும் போராளிகளின் எண்ணிக்கை அல்ல; உத்தி, உபாயம், திட்டமிடல், புலனாய்வு, உள் ஏற்பாடு வசதிகள், வழங்கல், தொழில்நுட்பம், ஆயுதங்கள், முறைமைகள் என்பனவற்றோடு வேறு பல விடயங்களும் நவீன போரியலில் முக்கிய பங்குவகிப்பன என்பதை யுத்தகடினம்கொண்ட இராணுவ மனிதரான கருணா அவசியம் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட யுத்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் இருந்த அத்தகைய இராணுவ மேதாவி வேறுயாருமல்லர், அது பிரபாகரன்தான்.

*கேள்வி:* தமிழ்த் தேசியத்துக்கும தமிழர் தாயகத்துக்கும் ஆதரவாகப் பிரசாரம் செய்யவேண்டாம் என்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களைக் கருணா மிரட்டியுள்ளார் என்றும், அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவை ஏற்படுத்தியுள்ள அவர், புதிய அரசில் தம்முடைய வேட்பாளர்கள் சிலருக்கு அமைச்சரவைப் பதவி தருவதாகவும் உறுதிமொழி அளித்துள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளனவே, இவை பற்றி உங்கள் கருத்து?

*பதில்:* எங்களுக்கு இந்தப் பிரச்சினை தெரியும். தமிழர்களின் போராட்டத்திற்கு எதிராகக் கருணா இப்போது செயற்படுவதால் இது எங்களுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. அங்கீகாரத்தையும் சலுகைகளையும் பெறுவதற்காக சிங்கள இராணுவத் தலைமையோடும், பேரினவாத அரசியல் சக்திகளோடும் ஒளிவுமறைவான தொடர்புகளை அவர் இப்போது ஏற்படுத்தியுள்ளார்.

கருணாவின் முரண்பாட்டை எவரேனும் வஞ்சகமாகப் பயன்படுத்துவதற்கு முயன்றால் அது சமாதான நடவடிக்கைகளுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பை ஏற்படுத்திவிடும் என்பதை அவரது தொடர்பாளர்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இந்தப் பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட அடிப்படைகளையும், கொள்கைகளையும் ஆதரிக்கும்படியும் அதற்காகச் செயற்படும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும்படியும் மட்டக்களப்பு, அம்பாறை மக்களை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

*கேள்வி:* தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தமிழர் தாயகத்தின், அரசியல் விடுதலைப் போராட்டத்தைப் பிரபாகரன் கைவிட்டுவிட்டார் என்று கருணா கூறுகின்றார். தமது வாதத்தை நியாயப்படுத்துவதற்குப் பிரபாகரனின் கடந்த வருட மாவீரர்தின உரையை அவர் சுட்டிக்காட்டுகிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தத்துவாசிரியர் என்ற முறையில் இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

*பதில்:* பிரபாகரனுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் உள்நோக்கோடு கருணா குழப்பமான அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார்.

பிரபாகரன் தன்னுடைய அடிப்படையான கொள்கைகளையும், திட்டங்களையும் கைவிட்டுவிடவில்லை என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்த முடியும்.

கடந்த வருடம் மாவீரர்தின உரையில் குறிப்பிடத்தக்க தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய இடைக்கால நிர்வாக சபை தொடர்பான புலிகளின் யோசனையை நடைமுறைப்படுத்தும்படி இலங்கை அரசை பிரபாகரன் கோரி இருந்தார். இந்த யோசனை ஓர் இடைக்கால ஏற்பாடேயன்றி, நிலையான இறுதியான தீர்வல்ல.

என்றாலும், சிங்களப்பேரினவாத ஆட்சியாளர் வர்க்கம் எங்கள் மக்களின் உரிமைகளைத் தொடர்ந்து மறுத்து இணக்கம் ஏற்படுவதைத் தடுத்து அடக்குமுறை சூழ்நிலையைத் தொடர்ந்தால் எமது மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்திப் பிரிந்து சென்று, சுதந்திர தனிநாடு ஒன்றை உருவாக்குவதைத் தவிர வேறுவழியில்லை" என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

பிரிந்து சென்று சுதந்திர தனிநாடு ஒன்றை உருவாக்கும் உரிமை உட்பட சுயநிர்ணய உரிமை கொண்ட தமது அரசியல் இலக்குக் கட்டமைப்பைப் பிரபாகரன் கைவிட்டார் எனத் தெரிவிக்கும் எந்தக்குறிப்பும் அதில் இடம்பெறவில்லை. கருணா அந்த முழுப்பேச்சின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் குழம்பியுள்ளார்.

- என்றார் பாலசிங்கம். (ஐ-எ-க)


**வணிகக் கல்வி முன்னோடிப் பரீட்சை - 2004**

பரீட்சை நிலை பங்கள் - விக்னா,நிரு
திகதி:24.03.2004 - Wed -9 (a.m.)

BY: திரு.S.யசோ

Note: வெளிமாணவரும் பங்குபற்றலாம்.

★ அனுமதிகள் மேற்படி நிறுவனங்களில் முற்கூட்டியே பெறப்படல் வேண்டும்.

★ விடைத்தாள் திருத்தி மீளளிக்கப்படும்.

(29778)

**அறிவித்தல்**

மதுபாரத்தில் இயங்கிய சகல A/L Logic வகுப்புகளும் உரிய நேர அட்டவணையின் பிரகாரம் BRIGHTMAN நிறுவனத்தில் நடைபெறும்.

மதுபாரத்தில் நான் இனி மேல் கற்பிக்கமாட்டேன்.

ஆசிரியர் : P.கமல்.

(29708)(40)

**CHEMISTRY CENTRE**

Temple Rd. , நல்லூர்

A/L 2006

"GENERAL CHEMISTRY"

ஆரம்பம்:19.03.2004 (5.30) p.m.

(Mon.,Fri. 5.30-6.30p.m.)

A/L 2005

"INORGANIC"

Tue., Fri. 3-4 p.m.

BY: அன்பழகன்

(சி33646)(37)

**விற்பனையாளர்கள் தேவை**

புத்தக வியாபார அநுபவம்மிக்க ஆண், பெண், விற்பனையாளர்கள் தேவை. நேரில் வந்து சந்திக்கவும்.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-33664) தொ.பேசி: 021 - 222 6693 (36-12-14)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.